

காஞ்சீபுரம்

21—7—'57

தம்பி!

முகத்தை ஏன் அப்படிச் சுளித்துக்கொண்டிருக்கிறாய்!
ஒரு முறைக்கு நாலுமுறை அழைத்தாலும், கவனியாமலிருக்கக்காரணம் என்ன?
என் மீது உனக்குக் கடுமையான கோபம்! அதுதானே உன் மௌனத்
துக்குக் காரணம்? கூப்பிடக்கூப்பிட, ஏனென்றும் கேளாமல், என்னைத்
திரும்பியும் பாராமல் இருக்கிறாய்! கோபம் உனக்கு ஏற்பட்டிருப்பது, நியாயம்;
ஆமாம், தவறு இழைத்தவன் நான்தான், ஆனாலும், அதற்காக,
அவ்வளவு கோபமா?
இத்துணை கோபமா?

"ஏன் இராது அண்ணா? எத்துணை நாட்களாகிவிட்டன, என்
னுடன் உரையாடி! என்னிடம் பேசக்கூட நேரமின்றி, என்ன பெரிய
வேலையாக இருந்துவிட்டாய்! நாடு புதிதாகக் காணச் சென்று
விட்டாயோ? நாவாய்தனில் ஏறிக் கடலின் கவர்ச்சி காணச் சென்று
விட்டாயோ? கட்டித் தங்கத்தை மடியில் வைத்துக்கொண்டு, கரித்
துண்டைத் தேடி அலைபவனுண்டா! இதோ நான் இருக்கிறேன், உன் உரை
கேட்டு உளம்மகிழ, நீ கூறிடும் கருத்தைக்கேட்டு செயலாற்ற, நீ காட்டிடும் காரணங்
களை நாட்டுக்கு அறிவிக்க, தீட்டிடும் திட்டங்களுக்கு உயிரூட்டம் அளிக்க, அறப்
போர்களை நடாத்த, விடுதலைக்காக வகுக்கப்படும் வழி நடக்க, வாகை தேடிட!—
இத்துணைக்கும், ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்துடன், மாற்றாரும் கண்டு பாராட்
டிடும் ஆற்றலுடன், நான் இருக்கிறேன், "அண்ணா! அண்ணா!" என்று அன்பு
ததும்பத் ததும்ப உன்னை அழைத்தவண்ணம்; நீயோ, அலட்சியப்படுத்திவிட்டாய்,
அருவருப்பும் அச்சமும் கொள்ளத்தக்க அளவுக்கு, என்னுடன் அளவளாவுவதை
நிறுத்திக்கொண்டாய், ஏன் உனக்கு இந்த ஆகாவழி, பொல்லாதபோக்கு ஏன்
கொண்டாய், என் மனதை ஏன் இத்துணை வாட்டிவிட்டாய்? தம்பி உடையான்
படைக்கு அஞ்சான்! என் தம்பிகள் தங்கக் கம்பிகள், நாட்டுக்கு உழைக்கும் நல்ல
தம்பிகள்! என்றெல்லாம் வாய் மணக்க, கேட்டிடும் செவியில் இனிமை பாயப் பாய
அழைத்து வந்த நீ, அண்ணா! காரணம் என்னவென்று கடுகத்தனையும் காட்டாமல்,
கிழமைக்கு ஒரு முறை காட்டிடும் தோழமையை நிறுத்திக்கொண்டனையே, ஏதோ
அலுவல் போலும்! அவசர அலுவலாக இருக்கும்! ஓயாத பயணம்! புதிய பொறுப்பு
கள்!—இந்தக் கிழமை இல்லை, அடுத்த கிழமை நிச்சயம் அண்ணன் எழுதும் கடிதம்
காண்போம், என்று எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணானது உனக்கென்ன தெரியும்?
இப்போது வந்துவிட்டாயா, ஒரு தவறும் செய்யாத பாவனையுடன், தம்பியாம்
தம்பி! தம்பி! தம்பி! என்று குழையக் குழையக் கூறிவிட்டால், குற்றம் அத்தனையும்
மறைந்துவிடும்போலும்! கொடுமை செய்ததற்கு, பதில்கூறு, அண்ணா!

இனியன, பல; இனி!

திட்டவட்டமான பதில்! ஆமாம், மழுப்பினால், ஏற்றுக்கொள்ள மாட்டேன்......போதும் அண்ணா! வேடிக்கை காட்டி என் வேதனையைப் போக்கிவிட முடியாது...... நான் சிரிப்பதனாலேயே கோபம் போய்விட்டது என்று எண்ணிக் கொள்ளாதே...போதும் போதும்! இவ்வளவு அனபும் அக்கரையும், உண்மையானால் இத்தனை காலம் எங்கே ஒளிந்திருந்தன...கண்டித்துத்தான் பேசுவேன்......ஆமாம், கடுமையாகக் கண்டிப்பேன்..."

தம்பி! இப்படியும் இதற்கு மேலும் கணைகளை வீசத்தான் செய்வாய்! நான், குறைபடுவதற்கில்லையே! குற்றவாளி நான்தான்! ஆனால், தம்பி! நீ எத்துணை இரக்க மனம் படைத்திருக்கிறாய், என்னிடம் கொண்டுள்ள அன்பின் காரணமாக, எதையும் பொறுத்துக்கொள்வாய், என்பது எனக்குத் தெரியாதா! கோபம் நிச்சயம் விலகிவிடும் என்ற நம்பிக்கையை, உன் நெரித்த புருவம் மாற்றிவிடாது! எனக்குத் தெரியும், அடுத்த கணம், அண்ணா! என்று அன்பு பொழியப்போகிறது! அதோ! அடக்க அடக்க, புன்னகை வந்துவிட்டதே — தவழும் புன்னகையைத் தந்தாகிவிட்டது -தம்பி! இனியும் என்னை வாட்டிட முடியாது--அதோ அந்தப் பழைய புன்னகை, ஒளிவிடும் கண்கள், கெம்பீரப் பார்வை, வா, தம்பி! வா, சிறிதுநாள் சந்திக்காமலிருந்துவிட்டோம்—பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? என்பது பழமொழி—புதுமொழி, பிரிந்தவர் கூடினால் பேச்சுக்குப் பஞ்சமா? என்பது.

தம்பி! உன்னிடம் ஒளிக்காமல் ஒன்று கூறிவிடட்டுமா—காரணம் ஏதேனும் காட்டவேண்டும் என்பதற்காகக் கூறுவதாக எண்ணிக் கொள்ளாதே—முழு உண்மை! உன்னைச் சிலநாள் நான் சந்திக்காததற்குக் காரணம், உனக்காக வேறு ஒரு முக்கியமான அலுவலிலே ஈடுபட்டிருந்ததுதான்! உனக்கு நான் ஏதேதோ ஆக்கித் தரவேண்டுமென்ற 'கடமை' உள்ளவனல்லவா? அதன் காரணமாக, நீண்ட நாட்களாக—ஆண்டு பலவாக—உன் அருமை பெருமைகளையும், நீயும் நானும் சார்ந்திருக்கும் இயக்கத்தின் வண்ணமிகு வரலாற்றினையும், பிற மொழியாளர்கள் அறிந்து ஆர்வம்கொண்டு நமது இலட்சியத்தை உணர்ந்து, ஒன்றுபடச் செய்யவேண்டும் என்ற ஆவல் உண்டு அல்லவா— அதற்கான பணியில், மும்முரமாக ஈடுபடவேண்டி இருந்தது — அப்பணியின் துவக்கக் கட்டம் செவ்வனே நடைபெற்றிருக்கிறது — ஆங்கில வார இதழ் வெளியீட்டினைத்தான் குறிப்பிடுகிறேன்— அந்தப் பணி எனக்குச் சற்று அதிகமான சிரமத்தையும், செலவினையும் அளித்தது — அந்தச் சுமையைத் தாங்கிக்கொள்வதிலே ஒரு சுவை இருக்கத்தான் செய்கிறது. என்றாலும், அந்தப் புதிய பொறுப்பிலே ஈடுபட்டிருந்த காரணத்தால், நான் உன்னைச் சந்திக்கும் பொன்னான வாய்ப்புகளை இழந்திட நேரிட்டது! உன்னைக் கண்டு, என் உள்ளத்தைத் திறந்து பேசுவதைவிட, எனக்கு வேறு எதிலே இன்பம் இருக்கமுடியும்! எனவே, உன்னை இதுநாள்வரையில் காணாததன் காரணம், உன்னை மறந்ததால் அல்ல, மறவாமல், உனக்கு மற்றோர் துணை தேடிடும் காரியத்தில் ஈடுபடவேண்டி இருந்ததால்!

ஆனால், காரணம் பல கூறினாலும், கடுமை குறைந்திடாது, உணருகிறேன், தம்பி! நன்றாக உணருகிறேன்! உணருவதால்தான், ஊரெல்லாம், உறங்கும் இந்த நேரத்தில் உன்னைக் காண்கிறேன் — எழுதிக் கொண்டிருக்கும்போதே!!

பிரிவு—தம்பி! நமது இலக்கியத்திலே, மிகச் சிறந்த சுவைமிகு பாக்களை நாடு பெற உதவிற்று! அறிவாய்!

நோம் என் நெஞ்சே!
நோம் என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற
சிறிஇலை நெரிஞ்சி
கட்கு இன் புதுமலர்
முள் பயந்து ஆங்கு
இனிய செய்த நம் காதலர்
இன்று செய்தல்
நோம் என் நெஞ்சே!

தம்பி! வறிய நிலத்திலே சிறிய இலையுடன் கண்ணுக்கு இனிய பூ தரும் நெரிஞ்சி படரும்; அந்தப் பூ உதிர்ந்ததும் கடிய முள்ளாகக் காய் காய்க்கும்; வழியே செல்வோர் முன்பு, பூ கண்டு மகிழ்ந்தனரல்லவா? அவர்கள் மகிழத்தக்க மலர்கள் தந்த அதே நெரிஞ்சி, முள்ளாகிக் குத்தும், வலி தரும்!

நமதரும் புலவர் பெருமக்கள்— எதை விளக்குவதற்கும் எந்த அறிவுரை தருவதற்கும், எத்தகைய நிலைமைகளை விளக்குவதற்கும், வார்த்தைகளுக்காக வானத்தை நோக்கிடும் வறியராக இல்லை! நெரிஞ்சி முள் காலில் தைத்தபோதும், அது தந்த வலியுடன் கலந்து புலவருக்கு, அந்தப் படரும் நெரிஞ்சியே கவர்ச்சியுள்ள மலர்களை முன்னம் தந்ததும், மலர்கள் உதிர்ந்த பிறகே, முள்ளாலான காய்கள் அதே நெரிஞ்சியில் காய்த்ததும், நினைவிற்கு வந்து, காதற் கடிமலர் பூத்திடும் போது கிடைத்திடும் காட்சி இன்பம்-பிரிவு ஏற்பட்டதும் முள்ளாகி நெஞ்சில் தைத்திடும் கொடுமையாகிவிடுவது பற்றி நினைவூட்டுகிறது.

நோம் என் நெஞ்சே
நோம் என் நெஞ்சே!

என்ற பா, பாருக்குக் கிடைக்கிறது! நெரிஞ்சி,முள்ளைத் தந்தது —ஆனால் முன்பு அதே நெரிஞ்சி **கட்குஇன் புதுமலர் — கண்ணுக்கு இனிய புதிய மலர்களைத் தந்த**தல்லவா? அது போலத்தான், பிரிவு, துன்பம் தருகிறது--ஆனால் முன்பு கண்ட இன்பம்..........!!

பிரிவு — குறித்த சுவைமிகு பாக்கள், பல உள; காதலின்பத்தைக் காட்டும் அப்பாக்கள், நிலஇயலையும் பொருளாக உள்ள பல இயற்கை உண்மைகளையும் விளக்கும் திறம் படைத்தன.

நீ, மகிழ்வாய், தம்பி, நெரிஞ்சியின் இயல்பை, பிரிவு தரும் துன்பம் குறித்த பாட்டுடன் இணைத்து அளித்த புலவரின் திறம்பற்றி— ஆனால் **அமைச்சர் பக்தவத்சலனார்** இருக்கிறாரே — அவருக்கு இந்த முறையே சுட்டோடு பிடிக்கவில்லை மெத்தக் கோபித்துக்கொள்கிறார்.

தம்பி, சட்டசபையில் கவர்னர் பேருரை குறித்து நான் பேசுகையில், "ஐயன்மீர்! எங்களை ஆயிரம் தூற்றுங்கள், கவலையில்லை; ஆனால், எங்களைக் காட்டியாகிலும் டில்லி தர்பாரிடம், தமிழ்நாட்டுக்கு அதிகமான வசதிகளைப் பெற முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள்" என்றேன்; அதற்கு அமைச்சர், "அண்ணாதுரை இப்படிச் சொன்னார்; செய்யலாம்; ஆனால் அவர் அதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டாரே; இனி நான் அதுபோல் நடந்தால், டில்லியில் உள்ளவர்கள் சந்தேகம் கொள்வார்களே!

(15-ம் பக்கம் பார்க்க)

பதினாறு!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [21—7—57] தனிப் பிரதி 16-காசு [இத

பதினாறும் ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கிறது, உங்கள் திராவிட நாடு! நாட்டு மக்களின் அகமகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். ஆண்டு பதினாறு! தத்தித் தவழ்ந்த குழந்தை, தளிர்மேனியும் புதுமெருகும் பெற்று காளைப் பருவத்தை அடைவது போல, ஏடு, எடுத்தடி வைக்கிறது. இதயம், களிக்கிறோம்! எல்லோருடனும், பங்குகொள்ளுகிறோம்!!

ஏட்டுக்கு மட்டுமல்ல, நாட்டிலும் இலட்சியத்துக்கு நல்லதோர் வரவேற்பு தென்படுகிறது. இந்தப் பூரிப்புக்கு, நாமும், நம்மாலான பங்கினைச் செலுத்தியிருக்கிறோம் என்பதில் ஆனந்தமடைகிறோம்; இதற்கு உறுதுணையாக இருந்த திராவிடப் பெருங்குடியினருக்கு அன்பையும் நன்றியையும் செலுத்திக் கொள்ளுகிறோம்.

ஏதோ, நேற்று ஆரம்பித்தது போலிருக்கிறது — ஆண்டு பதினாறு வந்துவிட்டது. காலம் எவ்வளவு வேகமாகச் சுழல்கிறது. மனிதராகப் பிறந்தோருக்கு வயது நூறு என்பார்கள்! இப்படி எல்லோரும் நூறு வயதுவரை வாழ்ந்து விடுகிறார்களா என்றால், கிடையாது—அரும்பிலும், மலர்ப் பருவத்திலும் இறையாவோரே அதிகம். எனினும், வயது நூறு என்பதை மனதில் வைத்து, ஒவ்வொருவரும் எவ்வளவு நாள் வாழ்கிறோம், என்று கணக்கெடுத்துப் பார்ப்பின், விந்தையும் வேதனையுமே பெருகும். பள்ளி புகுந்து அறிவு பெற்று வர ஆரம்பத்தில் 20 ஆண்டுகள் போய்விடுகின்றன — முதுமைக்காகப் பிற்காலத்தில் ஒரு நாற்பதைத் 'தள்ளிவிட வேண்டியவர்களாகிறோம். மீதியிருக்கும் 'நாற்பதில்', நாளொன்றுக்கு எட்டு மணி என்று வைத்துக் கொண்டாலும், தூக்கத்துக்காக ஒரு பதினைந்து ஆண்டுகள் கழிந்துவிடுகின்றன. எஞ்சியிருப்பது இருபத்தைந்து! இதிலும், நண்பர்களுடன் உரையாடல், மனைவி மக்களுடன் பொழுது போக்கு, உற்றார் உறவினர் வீட்டு நல்லது கெட்டது, ஆகிய காரியங்களுக்கு என ஒரு 'ஐந்தை' தள்ளிவிட்டால், மீதி இருபது. நூறு வயது உயிரோடிருப்பவர்களுக்கே, இருபது ஆண்டுகள்தான், எண்ணியதை முடிக்கவும், சமூகத்துக்குப் பணியாற்றவும் கிடைக்கிறது எனின், ஐம்பதிலும் அறுபதிலும் சாவுக்கு இறையாவோருக்கு எத்தனை ஆண்டுகள் கிடைக்கின்றன என்று எண்ணிடும்போது பெருமூச்சே பிறக்கும்! இதனால்தான், வாழ்நாள் சிறிது, வளர்கலை பெரிது என்பார்கள்! இப்படி வாழ்கிற இந்த நாட்களுக்குள்ளேதான் நாம் நம்முடைய இலட்சியங்களைச் சாதிக்க வேண்டியவர்களாயுள்ளோம் என்று எண்ணிடும்போது, காலம் எவ்வளவு கொஞ்சமாயுள்ளது என்பது தெரியும்—ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு வினாடியும், பெரியதோர் களஞ்சியம் போலக் காட்சியளிக்கும்—நினைத்ததை உடனுக்குடன் சாதித்துவிட்டு அடுத்ததற்கு விரைய வேண்டுமே என்கிற அவசரமும் பிறக்கும்!!

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் காலத்தை எண்ணிடும்போது, ஏதேதோ, எண்ணங்கள் இதயத்தில் எழுகின்றன. நாம் ஏந்தியிருக்கிற கொள்கை வெற்றி பெறுவதை, நம் காலத்திலேயே காணவேண்டும் என்கிற பரபரப்பும் ஆவலும் உந்தித் தள்ளுகிறது. பதினைந்து ஆண்டுகள் — உருண்டோடிவிட்டன. இறந்து போன இந்தக் காலம், விரயமாக்கப்படவில்லை என்பதை, தாயகத்தோர் அறிவர். புயலும், இடியும், மின்னலும், பெருமழையும் எதிர்த்து நம்மை இருக்குமிடம் தெரியாமற் செய்யுமளவுக்கு ஏற்பட்டதுண்டு. எனினும், அவைகளையெல்லாம் துச்சமெனத் தள்ளி, அறிவுப் பணியினைச் செய்திட, என்றும் நாம் தயங்கியது கிடையாது. வேலைப் பளு, கொஞ்சமல்ல! அதுவும், திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டவர் மனமெல்லாம் நிரம்பத் துவங்கிய நாள் முதல், வளர்ந்திடும் பொறுப்பையும், அதற்கான வேலைக் குவியலும் தோழர்கள் அறியாததல்ல. நமக்கு,

(14-ம் பக்கம் பார்க்க)

தலைவணங்கும் சட்டம்

★

[அரங்கண்ணல்]

சட்டசபையில்நம்மைப் பார்த்து பத்தாண்டுக்கால சமாதானஒப்பந் தத்துக்கு நிதியமைச்சர் அழைத் ததன் மூலம், ஒரு உருவான ஒன்மைமட்டும ஏறபட்டிருக்கிறது! இதுகாறும், திராவிடநாடு கோரிககையைப் பற்றியும், திரா விட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், கட்டுப்பாடாக இருட்ட டிப்பு செய்துவந்த வடநாட்டு ஏடு கள், ஆகா வென்று ஆர்ப்பரித் தெழுந்து, ஆத்திரமயமான தலை யங்கங்களைத் தீட்டி உண்மை நிலையை உலகுக்கு உணர்த்தும் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கின் றன!

கீழ் முனையாம் கல்கத்தாவி லிருந்து கிளம்பிடும் **அமிருதபஜார் பத்திரிகா** எனும் ஏடும், இனனொரு முனையாம் பம்பாயைச் சேர்ந்த **பிரீ பிரஸ் ஜர்னல்** எனும தாளும், தலை யங்கங்கள் தீட்டி, நமது கோரிக் கையின் அளவையும் வலிவை யும், கடந்த கிழமை தெளிவாக்கி யுள்ளன.

ஆதிக்கபுரியிலிருந்து வெளி வரும அந்த ஏடுகளிடமிருந்து, நாம, ஆதரவுச்சொல்லை எதிர் பார்ததேதாமில்லை. எனவே, வழக் கம் போலவே, ஐக்கிய ஆலா பனம், ஒற்றுமை உபதேசம், ஒரே நாடாகயிருக்கவேண்டியதன் அவசியம் ஆகியவைகளைச்செய்தி ருககின்றன. அதே சமயத்தில், அவை, பாபம், நிதியமைச்சர் மீதும பாய்ந்திருக்கின்றன. எபபடி அழைக்கலாம — இதனுல் திரா விடநாடு கோரிக்கையை ஏற்றுக் கொணடதாகவல்லவா ஆகிறது —இபபடி பொறுப்புள்ளவர் பேச லாமா—என்றெல்லாம கேட்டிருக் கின்றன, கல்கத்தா ஏடு, சரிதத் தைத் துணைக்கமைத்து, இந்த ஆபத்தை அரும்பிலேயே கிள்ள வேண்டிய அவசியத்தையும வலி யுறுத்துகிறது.

“சௌத்ரி ரஹமது அலி, பாகிஸ்தான் வேண்டுமென்று, லாகூர் மாநாட்டில் தீர் மானம் கொண்டுவந்தபோது, பலர்—ஏன்? ஜின்னுகூட — நடக்கக்கூடியதா என்று கேலியாகத்தான் கருதினர். ஆனுல், ஏழே ஏழு ஆண்டுகளில், இப் படிக் கருதப்பட்ட பாகிஸ்தான் ஏற்பட நேர்ந்தது என்பதை மறக்கமுடியாது.”

இவ்வண்ணம் தீட்டுகிறது, அமிருத பஜார் பத்ரிகா! இதன் மூலம் கேலியாகக் கருதாதீர் திரா விடநாடு கோரிக்கையை — ஏற் பட்டுவிட்டாலும்விடலாம — கபர் தார் இபபோதே கிள்ளி எறியுங் கள்—என்று எச்சரிக்கிறது! ஆனுல், பாபம, இந்த எச்சரிக்கை யினமூலம், அதுஒரு உண்மையை உலகுக்கு வழங்குகிறோம் என் பதை மறந்துவிட்டது, கேலி பேசபபட்ட பாகிஸ்தான், ஏழே ஏழாண்டுகளில், ஏறபடலாயிறறு எனபதுதான்!

இன்று எப்படி திராவிடநாடுகோரிக கையைமூடி மறைககவும், தி. மு. க. வின் செயல்களை இருட்டிலாழ்த் தவும், ‘பத்ரிகா’ போன்ற ஏடுகள முனைகின்றனவோ, இதேபோலத் தான் பாகிஸ்தான கோரிககை யின்போதும் முயன்றன. அன் றொரு நாள அன்பர் ஆச்சாரியார், “பாகிஸ்தான் அளிககபபடவேண் டியதுதான்!” என்று அறிவித்து விட்டு, அதுபற்றி காந்தியடிகளிட மும் ஜினனுவிடமும் தூதுகள நடாத்தியபோது, இந்த ஏடுகள் துந்துபி பாடவில்லை; தூற்றத் தான் செய்தன. ஆனுல், இன்று அதோ, பாகிஸ்தான் விளங்கு கிறது! எந்த நேரு அவர்கள் மனப்பூர்வமாக ஒப்பேன் என் றாரோ அவரே, கரம் குலுக்கி, அரச மரியாதைகள் அளிக்கும் நிலையிலிருக்கிறார்! அதை மறந்து விட்டு, ஆர்ப்பரிக்கிறது, பத்ரிகா.

‘பத்ரிகா’ பாய்வதோடு நிற் கிறது, பம்பாய் ஏடோ, இன்னும் ஒரு படி மேலே சென்று தெரிவிக் கிறது — சென்னை சர்க்காரே திராவிட நாடு கோரிக்கைக்கு ஆதரவாக இருந்து வருகிறார்களாம்! எப்படி, குற்றச் சாட்டு? இதுவரையில், எமது காங்கிரஸ் சர்ககார் என்று ஏற்றிப் போற்றிய ஏடுகூட, நிதியமைச்சர் வீசிய ஒரு சொல், எரிச்சலை உண் டாககி, ‘எல்லோரும் ஒரு கூட்டம் தான்’ எனகிற குற்றச்சாட்டை வீசச் சொல்கிறது. இங்குள்ள தேசியத் தோழர்கள், திருமணி கள, திருப்பல்லாண்டு எவ்வளவு வேண்டுமானுலும பாடலாம் டில்லிக் குக்கு! ஆனுல், அவர்களின் பார் வையில், இவர்கள் பெறும் பரிசு, சந்தேகம் தான்—பிரீபிரஸ் ஜர்னல் கூறுகிறது. சென்னை சர்க்கார் திராவிடநாடு கோரிக்கையில் அனுதாபம் உள்ளவர்களாம! இவர்கள் என்ன அனுதாபம் உடையவர்கள், திராவிட முன் னேற்றக் கழகம் என்றுல் என்ன பாடுபடுத்தியவர்கள், ‘திராவிடம்’ என்றுல் எப்படியெப்படி கேலியும் கிண்டலும வழங்குபவர்கள் என் பதை நாம் அறிவோம்; ஆனுல், வடவர் ஏடு, அவர்களுக்கும சந் தேகத்தையே பரிசாக வழங்கு கிறது! ஆள்வது காங்கிரஸ் சர்க் காராயிற்றே, அமைச்சர் சுப்பிர மணியம் ஒரு சுதந்திர வீரரா யிற்றே, என்று கூட எண்ண வில்லை; ஆத்திரத்தையும் அனலை

யும், அள்ளி இறைக்கிறது — ஏனெனில், பத்தாண்டுக்காலம் சமாதான ஒப்பந்தத்துக்கு அழைத்ததன் மூலம், 'திராவிட நாடு' என்பதை ஒப்புக்கொண்டு விட்டாராம் அமைச்சர்!!

அமைச்சரின் அழைப்பினை பெரியதோர் ஆபத்து என்று அவைகள் கருதுவதில் எவ்வித பொருளுமில்லை. அமைச்சர் சுப்பிரமணியம், எவ்வளவு தைரியம் படைத்தவர் என்பதை நாம் அறிவோம! அவரும் அவரது சகாக்களும், டில்லி கொஞ்சம் ஏறெடுத்துப் பார்த்தால், நமமீது எவ்வளவு இடுக்கண் அமபுகளை அள்ளிச் சொறிவர் என்பதனையும் அறிவோம். அவ்வளவு தூரம் டில்லியின் வலைக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறவர்கள் இவர்கள்! ஓட ஓட விரட்டினலும டில்லியின் பாதாரவிந்தமே கதியென்று கூறுகிறவர்கள்! இப்படிபபட்டவர்கள், வார்த்தை, பருவக் கோழிபோல, காறறடிக்கும் திசையில் சுழலும. எனவே, அஞ்சவேண்டியதில்லை அவைகள! ஆயினும, பதறுகின றன — பாய்கின றன — அந்தளவுக்கு நெஞ்சை உறுத்துகிறது, நமது வளர்ச்சி!!

ஒரே ஒரு சொல் உதிர்த்தார்! —உடனே, வடவர்தம ஏடுகள், அமைச்சரையும் அவரமர்ந்திருக்கும் சர்க்காரையும் திராவிட நாடு கோரிக்கைக்கு அனுதாபம காட்டுகிறவர்கள், என்கிறது. அதாவது, இப்படியொரு கட்டம் ஏற்படும் எனபதை, அந்த ஏடுகள் எதிர்பார்த்தவண்ணமே உள்ளன! இன்றில்லாவிடினும் ஒரு நாளைக்கு "இவர்களும" இந்த தி. மு. க.-வுடன் சேர்ந்துவிடுவார்களோ எனகிற சந்தேகமும சஞ்சலமும்—வடவருக்கு இல்லாமலில்லை!!

அதனுல்தான், உடனே கோபம் கொபபுளிக்க, ஆத்திரம அலைமோத, தலையங்கங்கள் நீட்டி சண்டமாருதமென, கண்டிக்கக கிளமபியுள்ளன.

இந்த ஏடுகள் எப்படி ஜின்னுவின பாகிஸ்தானை ஒபபவில்லையோ — ஆச்சாரியார்அது சரியெனக் கூறியபோது அவாமீது பாய்ந்தனவோ — சற்றேரக்குறைய அதே கட்டமதான், இப்போதும.

ஆச்சாரியார், டில்லியைத் தாக்குகிருர்—இலைமறை காயாகப் பிரிவினையையும் ஆதரிக்கிருர்—'திராவிடநாடு' எனபதனையும் ஒப்புக்கொள்கிருர்.

பாகிஸ்தான் கேட்டபோது ஜின்னுவையும் தாக்கின-வாதாடியவர்களையும வாட்டின எழுத்து ஈட்டிக்கொண்டு — அதேபோல, நமமையும் இப்போது ஏசுகின்றன.

ஏழு ஆண்டுகளில், 'பத்ரிகா' வின கூறறுபபடி, பாகிஸ்தான் கிடைத்தது! அதுபோல, ஏழாண்டுகளில் இல்லாவிடினும், விரைவில் திராவிடநாடு கிடைக்காமல் மட்டும் போகாது!!

இந்நம்பிக்கை உரமேறும், நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும நாம் காண்கிருேம ஒழிய, இலட்சிய முழக்கம் ஒடிந்து அறுந்து விடுவதற்கான ஒரு சிறு அறிகுறியும் கண்டோமில்லை. ஒரு ஐந்தாண்டுக்கு முன்னுல், திராவிடம் என கிற வார்த்தையே கசந்தது, மாற்ருருக்கு! இன று, அது, எங்கும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது! ஒரு இரண்டாண்டுக்கு முன்னுல், 'திராவிடப பண்பாடு' என்று சொனனுலே, எரிச்சலும கோபமும் ஏற்படும்!! இதோ,

தலைவணங்குகிறேன்

என்கிருர், பந்து. வடநாட்டு ஏடுகளுக்கெல்லாம் இலட்சிய புருஷராக விளங்கும் டில்லி உள்நாட்டு மந்திரி பண்டித பந்துதான் தெரிவிககிருர்,

"திராவிடப் பண்பாட்டுக்கு நான் தலை வணங்குகிறேன்"

தென் மண்டலத்தைத் துவக்கி வைக்க வந்த பண்டித பந்துக்கு சென்னை நகராட்சி மன்றததின சார்பில் வழங்கப்பட்ட வரவேற்புக்குத்தான, இவ்விதம் பதில் வழங்கியிருககிருர்.

சென்னைக் கார்ப்பரேஷன் மேயராக இருக்கும் தோழர் K. N. சீனிவாசன் யாரென்பது எல்லோருக்கும் தெரியும். காங்கிரஸ்காரர். அதன் சார்பிலேயே, மேயராகப் பொறுப்பும் ஏற்றவர். அவர், வரவேறபு வாசித்தளிக்கும்போது

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் —என

நான்குபிரதேசங்களும் ஒருமித்த பண்பாடு கொண்டவை. அதுதான் திராவிடத் தனிப் பண்பாடு-

என்றுகுறிப்பிட்டிருக்கிருர் அதை கேட்ட பந்து, அந்தத் திராவிடப் பண்பாட்டுக்குத் தலை வணங்குகிறேன, எனகிருர்!! சாதாரண சமாச்சாரமா இது? என்னென்ன இழி சொல்கள பெறறேரும! ஆரியமாவது—திராவிடமாவது என்று நாமககல்லார், நாக்கில் தழும்பேற ஏடெழுதிச் சுட்டார் — எவரெவரோ, இல்லாததையும் பொல்லாததையும எடுத்து வீசி, அரசியலில் பரிதாபத்துக்குரிய ஜந்துகளைபபோல நம்மைப பார்த்தார்கள! விவாதிக்க வருகிறீர்களா உன்று கேட்டோருண்டு — சான்று காட்ட முடியுமா என்று சண்டைக்கிழுததோர் அநேகம— 'திரா'விடம என்று சொல்லி கெக்கலித்தனர், பலர் — திராவிடம் என்று சொல்லி இனத்துவேஷத்தைத்தானே உண்டாக்கமுனைகிருய் என்று இல்லாததை வீசினர் — இதையெல்லாம் தாங்கிக்கொண்டோம். பலன்! இதோ, காங்கிரஸ் மேயர், பேசுகிருர், திராவிடப் பண்பாடு குறித்து — திராவிடம் என்ருல் எதெது என்றுதெளிவாக விளக்குகிருர்,

தமிழ்
தெலுங்கு
மலையாளம்
கன்னடம்

என்று! இது, சாதாரண காட்சியா? எவ்வளவு பெரிய வெற்றி நமக்கு! ஏதோ, அநாதைகளாய், அரசியல் அப்பாவிகளாய், கேலிக்கும் கிண்டலுக்கும் உரியவர்களாய், சரிதம அறியாச் சழககரென மதிககப்பட்டு, பார்ப்பனர் மீது பகை வளர்ககும் மனித நீதி அறியா மரக்கட்டைகள எனத் தூறறப்பட்டு, சந்தேகத்துக்கும் சண்டைக்கும் உரியவர்களென மாற்ருரால் மதிக்கப்பட்ட நம்முடைய குரல் கேட்கிறது, மேயர் உருவில்!! அதைக் கேட்கும்டில்லி மூலவர், வடநாட்டு ஆதிக்கத்தின் அதிபர், பணடித பந்து, மறுக்கவில்லை—அவருடைய ஐக்கியமாகாணம எவ்வளவு வெறிகொணடது எனபதைஅறிவோம இவரும் எவ்வளவு கடினஉளளமும் அஞ்சா இதயமும படைத்த

வர்எனக்கேள்விப்பட்டிருக்கிறோம் அப்பேறப்பட்டவரும்,

> திராவிடப் பண்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசினார், மேயர். அவர் குறிப்பிட்ட திராவிடப் பண்பாடு, ஆரியப் பண்பாட்டை விட வேறுபட்டதாயின், உங்கள் பண்பாட்டுக்கு தலை வணங்குகிறேன் நான்!!"

மேயர் பேசுகிறபோது சொன்னாராம், இந்திய உபகண்டத்தின் ஏனைய பாகங்கள், ஒவ்வொரு பிரச்னையின் போதும் இரத்தக் காடாக ஆனபோது கூட. தெற்கு எவ்வளவு அன்பு நெறியுடனும சாத்வீக முறையிலும் இருந்திருக்கிறதென்று! இதுதான, எமது திராவிடப் பண்பாடு என்று அறிவித்திருக்கிறார், மேயர் — இதில் குறிப்பிடவேண்டியது, தோழர் சீனிவாசன், விடாபபிடியாக பார்ப்பனப் பெரியவர்கள கடைப்பிடித்துவரும ஆரியக் கோட்பாடுகளை முற்றும அறிந்தவர்—அங்கேயே பிறந்துவளர்ந்தவர் என்பதுதான!!

அவருக்குப் பதிலளிக்கும் போதுதான் பந்து, தலைவணங்குகிறேன. என்று தெரிவிக்கிறார்— திராவிடப் பண்பாட்டின் அருமைக்கு நான் சிரம் வணங்குகிறேன், எனகிறார்.

இவ்விதம் டில்லி மூலவரே சொல்லும் காட்சி, ஏற்பட்டிருக்கிறதெனின், வளர்ந்துவரும் இந்த நியாயக் குரலை, எப்படி மறுக்க முடியும் இந்த ஏடுகளால்? வேண்டுமானால், இருட்டடிப்பு செய்யலாம — அந்தக் கட்டம் தாண்டுகின்ற நேரம் வந்துவிட்டது. அடுத்தபடி கேலி செய்யலாம—அதையும், இங்கே வேண்டிய அளவுக்கு அனுபவித்துவிட்டோம; கடைசியாகக் கண்டிக்கலாம்—விடுதலை விரும்பிகளுக்குக் கண்டனமே நல்லதொரு கேடயம் என்பதை பிரிந்து சென்ற பாகிஸ்தான் நிரூபிக்கிறது—எச்சரிக்கலாம், தூண்டிவிடலாம், அடக்குமுறையை ஏவச் செய்யலாம். அதனால் என்ன! உண்மையை மறுத்துவிட முடியுமோ!!

இதுவரையில் நமக்கு இருந்த ஒரு பெரிய குறையே, திராவிடம்—திராவிட நாடு என்பதே, பொருத்தமற்ற குரல், என்கிற குற்றச்சாட்டுதான்.

அதைத் தாண்டிவிட்டோம்— எதிர்த்தோரே, ஏற்றுக்கொள்ளுகின்றனர்—எதிரியே, தலைவணங்குகிறேன் என்கிறார் இது ஒரு தனிப் பண்பாடு*தான எனவும் ஒப்புக்கொள்ளுகிறார்—இனி என்ன!! தனிப பண்பாடு வெல்லவும், தனியரசு நிறுவவும், முனைவிட தீவிரமான வேலைகளில் ஈடுபடுவதுதானே?*

மேயர் சீனிவாசன்போன்றோரையும், பத்தாண்டுக் கால சமாதான ஒப்பந்தத்துக்கு அழைக்கும் அமைச்சரையும்,

> **இவர்கள் எல்லாமே திராவிட நாடு கேட்கிறவர்கள்!**
>
> **இவர்களுடைய சென்னை சர்க்காரே, திராவிட நாடு பிரச்சினையில்அனுதாபம் கொண்டது!!**

என்று, வடநாட்டு ஏடுகள் எழுதுவதால், என்ன பயன் ஏற்பட்டுவிட முடியும்? புதுவெள்ளத்தை அணை போட்டுத் தடுத்திடவா, இயலும்!! விரைவில், இலட்சியம் நிறைவேற தூண்டுகோளாக அமையுமேயன்றி தாமதமா ஏற்பட இயலும்!!

அமைச்சர், பத்தாண்டுக்கால ஒப்பந்தத்துக்கு நம்மை அழைத்தது, இந்த ஏடுகளுக்கு உடம்பு எரிச்சலையும், உள்ளத்து கொதிப்பையும் உண்டாக்கி, ஆகா! இப்படிச் சொல்லலாமா, அடுக்குமா, அவர்கள் குரலை ஏற்றுக்கொண்டது போலவன்றோ ஆகிறது, என்று அவசர அவசரமாக எடுத்து, ஆத்திரமயமாகத் தலையங்கங்கள் தீட்டுகின்றன. அமைச்சரும் 15-ந் தேதி சட்டசபையில்,

> "நான், திராவிட நாடு பிரிவினையை ஆதரிப்பதாகச் சொல்லப்படுவது தவறு. இதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்,"

என்று, தெளிவாக வெளியிட்டிருக்கிறார். பத்தாண்டு கால ஒப்பந்தத்துக்கு விடுத்த அழைப்பு, ஏற்படுத்திய பரபரப்பைக் கண்டதும், அமைச்சர் சுப்பிரமணியனார் இவ்விதம் அறிக்கை வெளியிட்டு மறுக்க வேண்டிய அவசியம் உண்டாகியிருக்கிறது.

அமைச்சரின் அறிவிப்பு, வடநாட்டு ஏடுகளுக்கேற்பட்ட அச்சத்தைப் போக்குமா என்பது வேறு விஷயம். இவர் இவ்விதம் அறிவித்தது, நம்மைப்பொறுத்த வரையில் ஒரு அதிசய சம்பவமுமல்ல! ஏனெனில், இவர்கள் டில்லியின் எடுபிடிகளாயிருக்கும் வரையில், பருவக் கோழிகளாக இருந்து தீரத்தான் நேரும்!! அறிவோம், நன்றாக. நம் அளவுக்கு, வீரமும் உறுதியும், இவ்வளவு விரைவில் அவருக்கு ஏற்பட்டுவிடவும் நியாயமில்லை, குருநாதரான ஆச்சாரியாருக்கே, இப்போதுதானே கண் திறக்கிறது!!

ஆனால், இதுபற்றி அவர் பேசினார் என்பதற்காகச் சீற்றத்தைச் சொரியும் இந்த வடநாட்டு ஏடுகள், என்றாவது ஒரு தலையங்கம் தீட்டியதுண்டா. தெற்குக்கும் நீதி வழங்க வேண்டுமென்று? இதே நிதி அமைச்சர் சுபபிரமணியம், அதிக நிதி உதவவேண்டுமென்று டில்லிக்குப் போய் ஏமாந்த முகத்துடன் திரும்பிய சம்பவங்கள் பல உண்டே. ஒரு தலையங்கம் எழுதியதுண்டா, வடக்குக்குப் புத்தி சொல்லி! இந்தியை எல்லாத் துறைகளிலும் புகுத்துகிறதே டில்லி, இது அநீதி, இது வேண்டாம் என்று ஒரு சிறு குறிப்பு எழுதினதுண்டா இவை!! இப்போது மட்டும், பாய வருகின்றன—புத்திமதிகள் சொல்லுகின்றன — பழியும் சுமத்துகின்றன. இதனால், வடநாட்டு அச்சுகள், எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்த ஆசை கொண்டுள்ளன என்பது விளங்கும். அந்த ஆசையாலேயே, நமக்கும், நமது கொள்கைக்கும் இதுகாறும்இருட்டடிப்பு செய்து வந்தன! இனி, இருட்டடிப்பு மட்டுமல்ல, கதவடைப்பு செய்தாலும், காரியம் பலிக்காது-காரணம், நமது கோரிக்கை ஒவ்வொருவர் இதயக் கதவுகளையும் திறந்துகொண்டு உள்ளே நுழையும், கட்டம் பிறந்துவிட்டது! இதை, இனி, எதுகொண்டும் அழித்திட இயலாது — அப்பேற்பட்ட பண்டிதபந்தே, தனிப் பண்பாடு என்று ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றால், இலட்சியபுரி, வெகுதூரத்திலுள்ளது என்றா பொருள்! ஒருக்காலுமில்லை! ஒருக்காலுமில்லை!!

★

சாவடி

— பழனி —

"அடடே! தம்பி மணிமுடியா? வா வா! படிச்ச பிள்ளை...நீ இல்லாமே, பொழுதே போகலே... ஊர் நடப்பெல்லாம் எப்படியிருக்கு?"

"என்னங்க பெரியய்யா! உங்களுக்குத் தெரியாததா..."

"எனக்கு வயல் தெரியும்... இதோ யிருக்கிற வீரமுத்துவுக்கு ஆடுமாடு தெரியும்... கார்மேகத்துக்கு கறிகாய் விளைவிக்கத் தெரியும்... நாடு நடக்கிற போக்கைத் தெரிஞ்சிக்க நேரம்தான் ஏது— படிக்கத்தான் பத்திரிகை ஏது? உன்னைப்போல விபரம் தெரிஞ்சவங்க அடிக்கடி எடுத்துசொன்னாத் தானே நல்லாயிருக்கும்..."

"அதைவிட எனக்கு வேலை! உங்களுக்கெல்லாம் நாலு சேதியையும் தெரிஞ்சிக்கணும்கிற ஆசை வருகிறதே, ஒரு அதிசயமாச்சே... ஆமாம், ஊர்லே ஏதாவது விசேஷம்..."

"எப்பவும்போலத்தான்! நீ ஊரை விட்டுபோய் ஒரு வருஷம்தானே யிருக்கும் அதுக்குள்ளே என்ன நடந்திருக்கப்போவுது... பாத்தா தெரியலியா?"

"தெரியுது! தெரியுது!" ஆனா, கண்ணாலே பார்க்கிறதைச் சொன்னாதான், கோபம் வருதே பந்துக்கு!!"

"பந்துக்குக்கூடக் கோபம் வருதா? அதென்ன தம்பி!"

"செச்சே! பந்துன்னா, ஒருத்தர் பேரு... டில்லியிலே யிருக்கிற பெரிய மந்திரி பண்டித பந்து..."

"அப்படியா? என்னமோ, காமராஜ், சுப்ரமணியம்னா நமக்குப் புரியுது... ஊம... சொல்லு தம்பி சேதியை... ஏன் அந்தப் பந்துக்குக் கோபம் வந்துது?"

"ஏன் வந்ததா! எல்லாம் இந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமாத் தான்..."

"ஓகோ! சரியா காரியம் செய்யணும்கிற ஆசையிலே, கோபம் வந்திருக்கும்...... பெரிய மந்திரியில்லே!!"

"அதான் இல்லே! சரியா காரியம் நடக்கணும்னு சொல்றாங்களே, அவுங்கமேலே தான், கோபம் வந்திருக்கு......"

"என்ன தம்பி, இதுக்கா கோபம் வரும்......நான் கூடத்தான் காலையிலே வாஞ்சிக்கிட்டே சொன்னேன், மழைவரும் போலிருக்கு, இன்னைக்கு ஏன் விதைக்கிறேன்னு ...... நல்லதுக்குத்தானே யோசனை சொல்வாங்க......"

"நீங்க சொன்னீங்க; வாஞ்சியும் கேட்டுக்கும். ஆனா, அவுங்க மந்திரியில்லே......!"

"மந்திரின்னா நாங்களும் மனுஷங்கதான்; ஒண்ணும தேவலோகத்திலேருந்து வந்து குதிக்கலேன்னு சட்டசபையிலே சுப்ரமணியம் பேசினதா நேற்று யாரோ சொன்னாங்களே......"

"சுப்ரமணியம் ஏன் சொல்றாரு!! இதுவரைக்கும் இப்படிப் பேசாதவரு, இப்ப ஏன் இப்படி அடக்க ஒடுக்கமாப் பேசறாருன்னு தெரியுதில்லே......"

"ஏன் தெரியலே! நல்லாத் தெரியுது...நீ சேதியைச் சொல்லு தம்பி...ஐந்தாண்டுத் திட்டம் பற்றி யோசனை சொல்ல வந்தது யாரு? ஆற்காடு இராமசாமிமுதலியாரா, இல்லே ஏ. கே. கோபாலனா, இல்லே சம்பத்தா, தர்மலிங்கமா?"

"இவுங்கதான் எதிர்க் கட்சிக்காரங்களாச்சே! யோசனைசொல்ல வந்தவரு, காங்கிரஸ்காரங்களாலேயே கெட்டிக்காரர்னு பாராட்டப்பட்டவரு........ மினுமசானின்னு பேரு..."

"என்ன பேரு! மினு மசானியா......"

"ஆமாமா, மினுமசானி! சிறந்த பொருளாதார மேதைனு புகழ்வாங்க. இந்தியா எப்படியிருக்கணும்னு "நமது இந்தியா" என்று ஒரு புத்தகம் எழுதியிருக்காரு. அதை, பள்ளிக்கூடத்திலே, எல்லாரும் கட்டாயமாகப் படிக்கணும்னு காங்கிரசுகாரங்களே வலியுறுத்தி வந்தாங்க..."

"அப்பேற்பட்டவரு, என்ன சொனாரு! இப்படி திட்டம் போடுறது வேண்டாம், கூடாதுன்னாரா?"

"யாருதான், திட்டம் போடுறது வேணாம்பாங்க! இந்த தேதியிலே விதைக்கணும்—நடணும்— அறுக்கணும்னு திட்டம் போட்டுத்தான், நீங்க வேலை செய்றீங்க. எப்படி யெப்படி படிச்சா பரீட்சையிலே பாசாகலாம்னு பள்ளிக்கூடத்துப் பையன்கூட திட்டம் போட்டுத்தான் படிக்கிறான். வந்த வரவென்ன, அதுக்கேத்தபடி இந்த மாசம் என்னென்ன செலவு செய்யலாம்னு வீட்டிலேயிருக்கிற அம்மாகூட ஒரு திட்டம் போட்டுத்தான் காரியம் செய்றாங்க...... அப்படியிருக்கும்போது, திட்டம் போடுறது வேண்டாம்னு சொல்வாங்க, தி.மு. காரங்ககூட திட்

டம் வேண்டாம்னு சொல்ல லியே..."

"ஆமாமாம்! பின்னே, ஏன் பந்துலுக்குக் கோபம் வந்தது?"

"விரலுக்குத் தக்க வீக்கம் வேணும்! கொண்டைக்குத் தக்க படி பூ, முடிக்கணும்!!—அப்ப டின்னு சொல்ருரு மசானி..."

"இதிலே, என்ன தப்பு?"

"உங்களுக்குப் புரியுது பெரி யய்யா! ஆனு, அவருக்கு..."

"எனக்குப் புரிகிற விஷயமா அந்தப பெரிய மந்திரிக்குப புரி யலே..."

"அவருக்கும் புரியாம இல்லே!"

"அப்புறம் ஏன் கோபம் வருது?"

"இதை ஏன் ஜனங்கப் புரிஞ்சி கிருப்பலே சொல்லணும்...அது வும் சர்க்கார் பததிரிகையிலே எழுதணும்னு கோபம்..."

"சர்க்கார் பத்திரிகையிலேயே மசானி, எழுதியிருக்காரா..."

"ஆமாம்! 'யோஜனு'...ன்னு டில்லி சர்க்கார் ஒரு பத்திரிகை நடத்துது. அதிலே, இவர், இப படியெல்லாம, யோசனைகளைச் சொல்லியிருக்காரு..."

"இப்படி யோசனைகளை தெரிஞ் சவங்க அறிஞ்சவங்க வெளியிடத் தானே பத்திரிகை..."

"சரிதான! சர்க்கார் இதுக்கா, லட்சக் கணக்கிலே செலவழிச்சு, போட்டோவெல்லாம பிடிச்சுப் போட்டு பத்திரிகை நடத்து ருங்க...சுய விளம்பரத்துக்குத் தானே...இந்திரர்களே! சந்திரர் களே! என்று புகழ்ந்து மசானி எழுதியிருந்தா பூரிப்பாய் இருந் திருக்கும்... அவரு, நல்லா நடக்க ணுமகிற ஆசையிலே யோசனைக வில்லே சொல்லுருரு..."

"என்னென்ன யோசனை சொல்லி யிருக்காரு..."

"திட்டம் ஒன்றுபோட்டு முடிச் சிருக்கோம்! அந்த முதல் ஐந் தாண்டுத் திட்டத்திலே, விலைச் சலே பெருக்கிட்டோம்னு சொல் ருேம, சரி! அப்படி விளைச்சல் பெருகிட்டதாலே, வைச்சுக்கு வோம்..."

"அது எப்படி? சண்டைக் காலம்போலத்தானே விலைவாசி யெல்லாம் இருந்தது! எங்கே விளைச் சல் பெருகியிருக்கு..."

"இல்லில்லே! பெருகிட்ட தாகவே வைச்சுகிட்டு. இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டத்திலே தொழில் அபிவிருத்தி செய்ற துன்னு திட்டம் போட்டிருக்கீங்க"

"மசானி சொல்றதை சொல் றியா?"

"ஆமாம்! திட்டம் போட்டிருக் கீங்க, சரி! தொழில் அபிவிருத்தி செய்றதுன்னு, எந்தத் தொழிலை அபிவிருத்திசெய்யணும்னு இல் லியா? மனிதனுக்கு எது உடனுக் குடன் தேவையாயிருக்கிறதோ, அதுக்கு ஆலைகளை அமைப்பீங் களா? அதை விட்டுட்டு, ரஷ்யா வையும் அமெரிக்காவையும் பார்த் துட்டு, அங்கேயிருக்கிறதுபோல கனரகத் தொழில்களை ஆரம்பிக்க லாமா?" ஏதோ டில்லியிலேயிருக் கிறதாலேஞ்சுபேர்கூடி இதைச்செய்ய ணும அதைச் செய்யணும்னுகூடிப் பேசிக்கிறீங்க. உடனே, அதுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவழி யும்னு கணக்குப போட்டுப் பாக் கிறீங்க! அந்தப் பணத்துக்கு எங்கேபோகிறதுன்னு யோசிக்கி றீங்க, ஜனங்க வரியாக்கொடுக் கிறது போதாதுன்னு தெரியுது ...உடனே வரியை அதிகமாக்கிடு றீங்க...அப்படியும் போதலேன்னு நோட்டை அடிச்சுத் தள்ளுறீங்க ...பண வீக்கம் அதிகமாகவே ஒண்ணுக்கு இரண்டா விலையெல் லாம ஏறுது......சல்லிசான விலைக்கு சாமான்கள் கிடைக்கச் செய்வதற்காகத் திட்டம்போடப் போக, விலை அதிகமாகிறது... இப்படியிருக்கு, நீங்க திட்டம் போடுற லட்சணமிருரு"

"ஆமா! எப்படித்தான், திட் டம் போடணும்கிருரு..."

"காந்தி சொன்னபடி, அடியிலே ருந்துபோகணுமே ஒழிய மேலே யிருந்து இறங்கிவரக்கூடாது! அஸ்திவாரத்திலேருந்துதான் கட் டிடத்தை எழுப்பிக்கிட்டுப் போக ணும...... அதுக்கு, கிராமத்திலே யிருந்து வேலையை ஆரம்பிக்கணும் —கிராமத்திலேயிருக்கிறவங்க ளுக்கு என்னென்ன தேவை. அதை நிறைவேற்றிக் கொடுக்க நம்மிடம் என்னென்ன வசதியிருக் குன்னு யோசிச்சு, முதல்லே அதைச் செய்யணும்...பிறகு படிப் படியா மற்ற விஷயங்களுக்குப், போகணும்...... அதை விட்டுட்டு, கோடிக் கணக்கிலே இயந்திரங் களுக்குக் கொட்டுறீங்க......ஒரே யடியா, ஒரேசமயத்திலே எல்லாம் ஏற்பட்டுடணும்னு நினைக்கிறீங்க ......இது எப்படி சாத்தியமானு யோசிக்கிறதில்லே......"

"நியாயமாத்தானே தெரியுது, மசானி சொல்றது! கால் வயற் றுக் கஞ்சிக்கே லாட்டரி அடிக்கும் போது, காதுக்கு வைரக்கமமல் இல்லாட்டா, என்ன?"

"அதையேதான் அவரும் கேட் கிருரு... வைரக்கமமல் ஒரு நாளைக்கு வேண்டியதுதான்... வேணும்னு சொல்லலே... அதுக் காக கஞ்சிக் கலயத்தையும் சரியா நிரப்பாமே, கம்மலின்னு திட்டம் போட்டா... என்ன அர்த் தம்?"

முதல் முதல் ஏரோப்ளேன் செய்து பறந்த வ்ரைட் சகோ தரர்களுள் ஆர்வில் வ்ரைட் என்பவருக்கு ஒரு விருந்து நடந் தது. அங்கே வந்திருந்த ஒரு நண்பர், "முதலில் பறந்தவர் நீங்கள் அல்ல என்றும் புரொபஸர் லாங்லி என்பவர்தான் என்றும் ஒருவன் சொல்லுகிருனே! இதை நீங்கள் சும்மா விடக்கூடாது; பதில் சொல்லவேண்டும். நீங்கள் பேசாமல் இருந்துவிடுகிறீர்கள்; உங்களை விளம்பரம் செய்துகொள்வ தில்லை. பேசுங்கள்; பலமாய் அடித்துப் பேசுங்கள்" என்ருர்.

"நண்பரே, உங்களுக்கு ஒன்று தெரியாதா? பட்சிகளைப் பாருங்கள். அவைகளுக்குள்ளே கிளிதான் பேச்சிலே கெட்டி; ஆனல் பறப்பதிலே மட்டி" என்ருர் ஆர்வில்.

—'வால் ஸ்ட்ரீட் ஜர்னல்'

சென்னை திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலித் தெரு நடராஜா கல்விக் கழக 12-வது ஆண்டு விழாவின் மூன்ரும் நாள் நிகழ்ச்சியின் போது தலைமை வகித்த கு. ராஜவேலு என்பார் கொண்டு வந்தாராம், ஒரு தீர்மானம். "பாரிஸ் முனை என்றழைக்கப்படும் இடமிருக்கிறதே அங்கு தமிழ் வள்ளல் பாரிக்கு ஒரு நினைவுச் சின்னம் உண்டாக்கி, அம்முனைக்கு, பாரியின் நினைவாக, 'பாரி முனை' எனப் பெயர் மாற்றம் செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிரேம்," என்பதுதான், அது. தீர்மானத்தில் தோன்றும் தமிழார்வத்தையும், வள்ளல் பாரியின் மீதுள்ள ஆசையையும் பாராட்டுகிரேம்- இப்படிப் பெயர் மாற்றம் செய்வதில், எவ்விதச் சிக்கலும்கூட இருக்கப் போவதில்லை! 'பாரிஸ்' என்பதிலுள்ள 'ஸ்' ஐ எடுத்தெறிந்து விட்டால், பாரி முனை என்ருகிவிடும்!! செய்யுமா, சர்க்கார்?

"ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால் என்னைக்கும் ஆபத்துத்தானே தம்பி!"

"இப்படி மசானி, கண்டிக்கிறதைக் கண்டதும், பந்து கோவிச்சுகிட்டு, சர்க்கார் பத்திரிக்கை நடத்துறவங்களைக் கூப்பிட்டு, இதையெல்லாம் ஏன் போட்டீங்கன்னு, அதட்டியிருக்காரு..."

"மறுக்கிறதுதானே — அதைவிட்டு, ஏன் கோபிக்கணும்..."

"எப்படி மறுக்கிறதுண்ணே! 5000-கோடி போய் போதும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குன்னுங்க......இந்த 5000-கோடியிலே ஆலைகளை அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிச்சு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போருமுனு சொன்னுங்க... அதுக்காக வரிமேலே வரியும போட்டிருக்காரு கிருஷ்ண மாச்சாரியாரு...ஏன் இப்படிஏழை ஜனங்களுக்கு வரியைபோட்டுவாதனைப் படுத்துறீங்க......இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரு ஏழாண்டுத் திட்டமாக்கி செஞ்சா என்ன... கூடியா முழுகிடப்போறதுன்னு எல்லோரும சொல்ருங்க ...தேஷ்முக்கே சொல்ருரு..."

"என்ன தார்பி தேஷ்முக்கா! முன்பு டில்லி மந்திரியாயிருந்தாரே, அவரா?"

"ஆமாம் அவரேதான்......ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வளங்கள் முழுமையும் நிச்சயம் கிடைக்குமென்கிற நம்பிக்கையில்லை. அதன் விளைவு என்ன? ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறைக்க வேண்டும் அல்லது நாம் இன்னும் மீதம் பிடிக்கவேண்டும். ஏதோ ஓரளவு இருப்பதை வைத்து வாழ்க்கை நடத்தி வரும் நம்மால் மேலும் சிரமங்களைத் தாங்க இயலாது, அத்துடன் ஐந்தாண்டுத் திட்டச் செலவு முன்பிருந்ததைவிட அதிகமாகிவிட்டது......எனவே, மீண்டும் பரிசீலனை செய்து மாறுதல் செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது எனக் கருதுகிறேன்...என்று சென்னையில் கடந்த 10-ந் தேதி சொல்லியிருக்கிருக்காரு...."

"........அதாவது, பணம் வேணும்னு மக்கள் மென்னியைப் பிடித்து அஞ்சு வருஷத்திலே எல்லாத்தையும் செய்யறதை ஏழு வருஷத்திலே செஞ்சா என்ன, எட்டு வருஷத்திலே செஞ்சா என்னனு கேட்கிருங்க..."

"ஆமாம் பெரியய்யா, ஆமாம்! இபபொழுதே என்ன கஷ்டப் படுருேம்?"

"நெருப்புப்பெட்டி விலையுமலே ஏறியிருக்கு!"

"இப்படிப்பட்ட தொல்லையெல்லாம ஒழுங்கா திட்டம் போட்டால் ஏற்படுமான்னு கேட்கிருரு, மசானி... ஒழுங்காத்தான் போடலே... போட்டதையாவது ஒழுங்குப படுத்துங்கிருரு தேஷ்முக!"

"இப்படிச் செய்றதிலே, என்ன நஷ்டம? எதுக்காக பந்துக்குக் கோபம் வரனும்!"

"பந்துக்கு மட்டுமில்லே, அவருக்கு மேலேயிருக்கிற நேருவுக்குக் கூட கோபம் வருது... வேண்டியவங்களும் தெரிஞ்சவங்களும இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் இபபோதுதான 5000 கோடியும் போதாது அவசியம் 6000 கோடி ரூபாய் வேணும்கிருரு..."

"எங்கே போவாங்களாம், இவ்வளவு கோடிக்கு?"

"உங்க தலையிலும் என் தலையிலும் தான் கைவாப்பாங்க! வரிகளை இன்னும் அடுத்த வருஷம் அதிகமாக்குவாங்க!"

"......பயமாயிருக்கே தம்பி. இவுங்க, அஞ்சாண்டு திட்டம் போட்டு முடிக்கிறதுக்குள்ளே, நாமெல்லாம் உயிரோடு இருப்போமாங்கிறதே சந்தேகமாயிடும் போலிருக்கே..."

"அதுக்குத்தான் திட்டகாலத்தை நீட்டுங்க என்கிருங்க.... ஒரு ஆச்சரியம பாருங்க பெரியய்யா! இபபடிச் சொல்றவங்க மேலே, காங்கிரசு தலைவர்களுக்குத்தான் கோபம் வருதுனனு இல்லே — கம்யூனிஸ்டுகளுக்கும் கோபம் வருது!"

"இவுங்களுக்கு என்னவாம்!"

"உருப்படியா ஒரு காரணமும் இல்லே...எங்க ரஷ்யாவைப்போல இங்கேயும் ஐந்தாண்டுத் திட்டம் அமுல் நடக்குதுன்னு இப்ப சொல்லிக்கலாம்...... ஏழாண்டுத் திட்டம்னு முடியாது பாருங்க... அதுக்காக, கோபம் வருது..."

"நல்ல வேடிக்கை தம்பி! ஏன் கிளம்பிட்டே... நாளைக்கு வர்றீயா..."

"முடிஞ்சா வர்றேன பெரியய்யா!!"

★



—பமுநி—

கோட்டயம் நகரில் மாவட்ட நீதி யகம் கூடியிருக்கிறது. மண்டபத்தி லும் நடைபாதையிலும் மக்கள் பெருந் திரளாகக் கூடியுள்ளனர். அவர்களில் பலருடைய விதி அன்று முடிவுசெய்யப்படவிருந்தது.

கூட்டமிக்க மண்டபத்தில் ஒரு வழக்கு விசாரணை நடந்துகொண்டி ருக்கிறது. நிபுணர்களான வழக்கறி ஞர் சட்டச்சிக்கல்கள் பற்றிக்காரசார மாக வாதித்துக் கொண்டிருக்கின்ற னர். கோர்ட்டின் தலைமைப் பீடத்தில் நீதித் தராசைப் பிடித்தவண்ணம் ஒரு மாது அமர்ந்திருக்கிறார்.

இது அசாதாரணமான காட்சியா கும். ஏனெனில் இந்திய துணைக் கண்டத்திலேயே இந்தக் கோர்ட்டில் தான் ஒரு பெண் நீதிபதியாக இருக் கிறார்.

திருமதி அன்னாசண்டி என்னும் இந்த மாது 1943 லிருந்து 14 வருட கால மாக இந்த நீதிபதிப் பதவியை மெச் சத்தக்க ஆற்றலுடன் வகித்து வந்தி ருக்கிறார்.

சாந்த குணமும் தன்னடக்கமும் படைத்த திருமதி அன்னா வழக்கறிஞர் களின் சொற்போரை அமைதியாகக் கவனித்தவண்ணம் இருப்பார். அவ ருடைய ஊடுருவும் கண்கள் அவர் முன்னுள்ள பிரச்னையின் நுணுக் கத்தை அனாயாசமாய்க் கண்டு பிடித்துவிடும்.

அவருடைய முகத் தோற்றத்திலே நம்பிக்கையும்ஆணவமற்ற அதிகாரத் தையும் காணலாம். விசாரணை நடை பெறுகையில் அவ்வப்போது ஏதா வது சொல்லுவார். அது வழக்கறி ஞரின் மூச்சு விடாத பேச்சுக்கு முற் றுப்புள்ளி வைத்துவிடும்: அல்லது அவர் வேடிக்கையாக ஏதாவது சொல்லுவார். அது கேட்டுக் கைதிக் கூண்டில் நிற்பவர்கள்கூட வயிறு குலுங்கச் சிரித்துவிடுவார்கள்.

அநுபவமிக்க வழக்கறிஞர்கள் தங் களுடைய சொல்வன்மையால் விஷ யத்தை எவ்வளவுதான் குழப்பினாலும் உண்மை யாதென்பதை அவர் கண்டு பிடித்துவிடுவார். அத்தகைய மதி நுட் பம் படைத்தவர் திருமதி அன்னா.

திருமதி அன்னா 28 ஆண்டுகட்கு முன்னர், தமது 24வது வயதில் இதே கோர்ட்டில் வழக்கறிஞராக — நாட்டி லேயே முதல் பெண் வழக்கறிஞராக —தோன்றினார். கொஞ்ச நாளில் வழக்குகள் வந்து குவிந்தன. பர பரப்பு மிக்க பல வழக்குகளிலும் ஆஜரானார், 8 வருடத்திற்குப் பின்னர் திருவாங்கூர் ராஜ்யத்தின் நீதி இலா காவில் சேர்ந்தார்.

வழக்கறிஞர், நீதிபதி ஆகிய இரு நிலைகளிலும் திருமதி அன்னாவின் துணிவையும் நேர்மையையும் பாராட் டாதார் யாருமில்லை. தற்போது அவர் இந்திய மாதர் திலகங்களில் ஒருவ ராக விளங்குகிறார்.

இத்தகைய பண்புநலமிக்க புதல்வி யைத் திருவாங்கூர் தோற்றுவித்தது வியக்கத்தக்கதன்று. கேரள நாடு பண்டுதொட்டுப் பெண்டிர் நாடாகவே விளங்கி வந்திருக்கிறது. அவர்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் உயர்ந்த முக்கிய ஸ்தானம் வகித்துவந்திருக் கின்றனர். தங்கள் தகுதியையும் அந் தஸ்தையும் உணர்ந்திருக்கின்றனர்.

தவிர இந்தியாவிலேயே திருவாங் கூரிலும் கொச்சியிலும்தான் படித்த பெண்களின் தொகை அதிகமாகும். அதிலும் சிரிய கிறிஸ்தவ சமூகத்தில் தான் அவர்கள் தொகை மிகுதி. திரு மதி அன்னா இச்சமூகத்தில் தோன்றி யவர்தாம். அவர் தமது துறையில் மேதையாக விளங்குகிறபோதிலும் அவர் புகழ் படைத்த கேரள மாதர் வரிசையில் அண்மையில் சேர்ந்த வரேயாவார்.

திருமதி அன்னா திருவாங்கூர்க் கிறிஸ்தவக் குடும்பமொன்றில் 1905ம் ஆண்டு பிறந்தார். அவருக்கு அன்னா ஜாகப் என்னும் பெயர் இடப்பட்டது. அவரது தந்தை ஒரு டாக்டர். அவர் அன்னா குழந்தையாயிருந்தபோதே காலமாகிவிட்டார். அன்னாவின் தாய் ஒரு பள்ளி ஆசிரியையாக இருந் தார். துணிவுமிக்க அவர் தம் முடைய ஆரம்பக் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது தம் புதல்வியர் இருவரையும் நல்ல படிப்பாளிக ளாக்கிவிட வேண்டுமென உறுதி பூண்டார்.

விளையும் பயிர் முளையிலே என்ப தற்கிணங்க அன்னாவிடம் குழந்தைப் பருவத்திலேயே அசாதாரணமான அறிவு நுட்பம் அமைந்திருந்தது. படிப்பிலும் சரி, பாடசாலையின் இதர அலுவல்களிலும் சரி, உச்ச நிலையே அவரது குறிக்கோளாக இருந்தது.

பள்ளிக்கூடங்களில் அவர்பால் அமைந்திருந்த அபார நினைவாற்ற லும் ஊடுருவும் மதி நுட்பமும் நினைத் ததை விரித்துரைக்கவல்ல நாவன்மை யும் அவரது எதிர்கால மேம்பாட் டுக்கு முன்னோடியாய் விளங்கின. அவர் ஆண்டுதோறும் வெற்றி ஏணி யில் உயர்ந்துகொண்டேயிருந்தார்.

அன்னா 1926-ம் வருடம் எம். ஏ. பட்டம் பெற்றார். அதுவரை பள்ளி யிலும் கல்லூரியிலும் வெற்றியொன் றையே அவர் கண்டார்.

அன்றைய நிலையிலே அவர் திரு வனந்தபுரம் அரசினர் கல்லூரியில் ஆசிரியையாகச் சேர்வார் என்றே பலரும் நினைத்தனர். ஆனால் இதற் குச் சில மாதம் முன்னதாக அவரது வாழ்க்கையை அடியோடு மாற்ற விருந்த சம்பவமொன்று நிகழ்ந்திருந் தது.

அவர் அப்போது திருவாங்கூர்ப் போலீசில் பிராசிகியூட்டிங் இன்ஸ் பெக்டராக இருந்த பி. இ. சண்டி என்பவரை மணந்து கொண்டார். திரு. சண்டி இறுதியில் ராஜ்ய டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி யிலிருந்து ரிட்டயரானார். புகழ் படைத்த வழக்கறிஞர்கள் குடும்பத் தில் தோன்றிய அவர் தாமும் திறமை மிக்க வழக்கறிஞராக இருந்த கார ணத்தால் ஆற்றல் மிக்க தம் மனைவி யைச் சட்டப் படிப்புக்கு அனுப்பத் துணிந்தார்.

சட்டப் படிப்பில் அன்னாவுக்கு ஆர்வம் இல்லாதிருந்த போதிலும் அவர்தம் கணவரின் விவேகத்தை நம்பித் திருவனந்தபுரம் சட்டக் கல் லூரியில் சேர்ந்தார். சட்டக் கல்லூரி யில் இந்த இளம் பெண் சேர்ந்தது பெரிய பரபரப்பாக இருந்தது. ஆனால் திருமதி அன்னா சட்டப் படிப்

யில் தாம் ஆண்களுக்குத் தாழ்ந்தவரல்லர் என்பதை மெய்ப்பித்தார்.

2 ஆண்டுகள் பின்னர் அவர் வழக்கறிஞர் உடுப்பணிந்து இந்தியாவின் முதற் பெண் வழக்கறிஞராக கோட்டயம் ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டுகளில் ஆஜரானார்.

மக்களெல்லாம் பல நாள்வரை கோர்ட்டைச் சுற்றிக்கூடி நின்று இந்த அரிய காட்சியை ஒரு பெண் வழக்கறிஞராக விளங்குவதைக் கண்டுகளித்தனர். இது நிகழ்ந்தது 1929ல். அதிலிருந்து அவர் வெற்றியையே கண்டுவந்திருக்கிறார். வழக்கறிஞர் தொழிலில் உடனடியாகப் பிரபலம் பெற்றார். அதன் விளைவாக ஏராளமான வழக்குகள் வந்து குவிந்தன. அவரது கணவர் பல ஊர்களில் பதவி வகிக்கச் சென்றபோதும் அவரும் உடன்செல்லவேண்டியிருந்ததை நோக்குகையில் அவரிடம் வழக்குகள் இவ்வாறு குவிந்தது வியக்கத்தக்கதேயாகும்.

அந்தக் காலத்தில் அவர் புகழ் படைத்த வழக்கறிஞர் பலருடன் கடுமையான சட்டப்போர் நடத்த வேண்டியிருந்தது. அந்த வழக்கறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாக அவரது சட்டத் திறமையைப் பாராட்டினர்.

திருமதி அன்னா தாம் வழக்கு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த அதே சமயம் பல சமுதாய அரசியல் பணிகளிலும் பெருநாட்டம் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலம், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் ஆழமாகவும் நகைச்சுவைபடவும் பேசவல்ல நாவலராக விளங்கினார். அதனால் பலரது வேண்டுகோளுக்கும் இணங்கிச் சொற்பொழிவாற்றுவது அவருக்குப் பெரிய வேலையாகிவிட்டது. திருமதி அன்னா பல மாதர் நிறுவனங்களிலும் பெரும் தொண்டு புரிந்து வந்தார்.

திருமதி அன்னா 'ஸ்ரீமதி' என்னும் பத்திரிகையொன்றை நடத்தினார். அந்தப் பத்திரிகை பெண்ணுரிமைக்காக வெகு தீவிரமாக இடையறாது போராடி வந்தது. இத்தகைய பல துறை அறிஞரான அன்னாவின் ஆற்றல் பிரகாசிப்பதற்கு நீதிமன்றங்களை விடப் பெரிய துறையொன்று அவசியமாயிருந்தது.

திருமதி அன்னா 1931-ல் ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் பட்டம் தாணுப் பிள்ளையை அவரது சொந்தத் தொகுதியான திருவனந்தபுரத்தில் எதிர்த்துப் போட்டியிட்டார். போட்டி மிகக் கடுமையாக இருந்தது. ஆனால் திருமதி அன்னா தோல்வியுற்றுவிட்டார். பட்டம் தாணுப் பிள்ளை பிற்பாடு கேரளத்தில் இத்தடவை முதல் மந்திரியாயிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இத் தேர்தலால் திருமதி அன்னாவின் சிறப்பை உணர்ந்த ராஜ்ய சர்க்கார் அவரைச் சட்டசபை மெம்பராக நியமித்தனர். இப் பதவியை அவர் திறம்பட வகித்தார். அவர் சட்டசபையில் மாதர் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டார். சிறைகளில் முக்கியமாகப் பெண் கைதிகள் விஷயத்தில் சீர்திருத்தங்கள் வருமாறு செய்ய இடையறாது உழைத்தார்.

அவர் இத்தகைய சீர்திருத்தங்கள் பலவற்றைத் தாமே முன்னின்று துவக்கிவைத்தார். அவர் பெரிய வழக்கறிஞராக மட்டுமன்றித் தென்னிந்தியாவில் பெயர் பெற்ற பிரமுகர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

1937ல், இந்தியாவிலேயே ஒரு நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்கும் முதற் பெண் என்னும் முறையில் ராஜ்யத்திற்குக் கீர்த்தியைத் தேடித் தரும் பொருட்டு நீதி இலாகாவில் சேரும்படி திருமதி அன்னாவை சர்க்கார் கேட்டுக்கொண்டனர், சர்க்கார் பல மாதம் வரை இடையறாது வற்புறுத்திய பின்னர் அவர் வருமானமிக்க வழக்கறிஞர் தொழிலைத் துறந்துவிட்டு நீதிபதி பதவியை ஏற்கச் சம்மதித்தார்.

வெள்ளிதோறும் வெளிவரும்
அரசியல் ஏடு!

"தனி அரசு"

ஆசிரியர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ

முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் தேவை!

விபரங்கட்கு :
"தனி அரசு"
4. டாக்டர் நடேசனார் ரோடு,
சென்னை — 5.

அதிலிருந்து அவர் நீதிபதி பதவியை, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க முறையிலேயே வகித்து வந்திருக்கிறார். அவர் அளிக்கும் தீர்ப்புகள் மேல்கோர்ட்டுகளால் மாற்றப்பட்டதில்லையென்றே சொல்லலாம். பொதுமக்கள் மட்டுமன்றி உயர் நீதிமன்ற நீதிபதிகளும் அவரைப் பாராட்டியுள்ளனர். இந்திய சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோரும் நீதி வழங்குவதில் அவர்பால் காணப்படும் மன்ற நலன்களைப் போற்றியுள்ளனர்.

திருமதி அன்னாவின் வாழ்க்கை கேரள மாதருக்கு ஒரு பெரிய முன்னேற்றத் தூண்டுகோலாக இருந்து வருகிறது. இப்போது பெண்களில் பலர் சட்டத் தொழிலிலும் பிற பதவிகளிலும் வெற்றி பெற்று வருகின்றனர். திருமதி அன்னாவுக்கு எதிர்காலத்தில் பெரும் பதவிகள் காத்திருக்கு மென்பதிலும் நாட்டுக்கு இன்னும் பல பெரிய தொண்டுகளை அவர் செய்வார் என்பதிலும் சந்தேகமில்லை.



கனடா

[எம். எஸ். வெங்கடாசலம்]

ஏறக்குறைய ஒன்றரை கோடி மக்கள் தொகையைக்கொண்ட நாடு அது. இன்று அகில உலக அரங்கில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது! ஐக்கிய நாடுகள் அமைப்பிலும் அதன் குரல் ஒலிக்கிறது — பெருமளவு மதிப்பும் பெறுகிறது. பற்பல நாடுகளுக்கும் பணம் கொடுத்தோ —பொறியியல், நுண்ணியல் முதலியவற்றின் வளர்ச்சிக்கு உதவியோ — அவைகளின் வாழ்த்தினைப் பெறுமளவுக்கு வளர்ந்திருக்கிறது அந்த நாடு!

இவ்வளவுக்கும் அந்த நாடு மிகப் பழைய வரலாறு எதுவும் பெற்றதல்ல! "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றி மூத்த தமிழர்" என்று கூறி நாம் பெருமை அடைவது போல் அல்ல அவர்கள் நிலை; அவ்வித வரலாறு இல்லை அவர்களுக்கு.

அந்த நாட்டின் பெயர் **கனடா**. அமெரிக்க நாட்டின் வடக்கே இருக்கிறது. அது உலகுக்கு அறிமுகமானதே கி. பி. 1497-ம் ஆண்டில்தான். அறிமுகப்படுத்தியவர் **ஜான் காபட்** என்னும் ஆங்கிலேயர். பின்னர் 1534-ல் **ஜேக்கஸ் கார்டியர்** என்னும் பிரெஞ்சுக்காரரும் அங்கு வந்தார். அதிலிருந்து பிரெஞ்சு நாட்டு மக்கள் ஏராளமாகக் குடியேறினர்—**புதிய பிரான்சு** என்றும் அதனை அழைத்தனர்.

குடியேறிய பிரெஞ்சுக்காரர்களுக்கும், அந்த நாட்டிலிருந்த ஆதிவாசிகளுக்குமிடையே எத்தனையோ போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதற்கிடையே ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே ஆதிக்கப் போட்டி வேறு ஏற்பட்டுவிட்டது. முடிவில் ஆங்கிலேயர் வென்றனர்—நாடு அவர்கள் கைவசம் மாறியது. என்றாலும் சிறு சிறு பகுதிகளாகச் சிதைந்துகிடந்த நிலப்பரப்பெல்லாம் இணைக்கப்பட்டு, நிலையான, கொந்தளிப்பில்லாத அரசாங்கம் தோன்றியது 1867-ல் தான்.

இருந்தும் அரசியலிலும் பொருளியலும் இன்று கனடா பெற்றுள்ள முன்னேற்றம் மகத்தானது. விவசாயமே முக்கிய தொழிலாக — வானை நம்பியே வாழும் நிலையில் — நிலையற்ற பொருளியல் அமைப்பில் அந்த நாடு இருந்த காலம் ஒன்றுண்டு.

இப்போதோ ஆலைத் தொழில் பல, எவரும் அதிசயிக்கத் தக்க அளவு வளர்ந்துள்ளது அங்கு. எண்ணெய்க் கிணறுகள்—இரும்புக் கனிகள்—மற்றும் யுரேனியம் —இத்தனையும் இருக்கின்றன அந்த நாட்டில். இதைக் கண்ட அந்நிய நாட்டு முதலாளிகள் வெள்ளமெனப் பணத்தை அங்குக் கொண்டுவந்து குவித்து இந்தத் தொழில்களை ஏற்று நடத்தத் துவங்கினர்.

இவை மட்டுமல்ல! காடுகளிலுள்ள மரங்கள் காகிதம் செய்ய உதவுகின்றன. அந்தத் தொழிலும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது இன்று.

காகிதம் செய்தல், கனிகளை வெட்டியெடுத்துப் பற்பல உலோகங்களையும் பயன்படுக்கல்—நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல், மின்சார வசதிகளைப் பெருக்குதல் —இப்படிப் பல வகைகளில் முன்னேற்ற திசையினை நோக்கி நடந்துள்ளதால் அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்திருக்கிறது. வருகின்ற இருபது ஆண்டுகளில் அது மேலும் உயரும்—ஆலைத் தொழில்கள் மேலும் வளரும் என்று அந்த நாட்டின், அரசாங்க சார்பற்ற குழு ஒன்று அறிக்கை விடுத்திருக்கிறது.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் அந்த நாட்டு மக்கள் தொகை 50 000 அதிகரித்திருப்பினும் அந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையாம். மக்கள் தொகை பெருகப் பெருக, அதற்கேற்றபடி தொழில் வளத்தினையும் பெருக்கிக்கொண்டு அனைவருக்கும் வேலை கொடுக்க முடியும் என்று கருதப்படுகிறது அந்த நாட்டில்!

நாமும்தான் பெற்றிருக்கிறோம் இவ்வளவு வளத்தினையும்—இன்னும் அதிகமாகக்கூட. **இரும்பு** உண்டு, தங்கமுண்டு—**யுரேனிய**முண்டு, தோரியம் உண்டு—**நிலக்கரி** உண்டு, மாங்கனீஸ் உண்டு—மிளகு விளை காடுகளுண்டு, **ரப்பர்** தோட்டங்களுண்டு — **இஞ்சியும்** ஏலக்காயும் ஏராளமாக **விளை**கின்ற பகுதிகளுண்டு — **கவி**னுறு மலையுண்டு, **அருவிகள்** அனந்தம் — இருந்தும் **நம்** நிலையென்ன? **இத்தனையையும்** பயன்படுத்திப் **பொருளாக்கிடும்** உரிமை நாமிடம் **இருந்திட்டால்,** இப்போதிருக்கும் **நிலையிலா இருந்**திடும் **திராவிடம்? எனவேதான்** நாம் கேட்கிறோம், **இந்த நாட்டை** ஆண்டிடும் பொறுப்பும் **உரிமை**யும் **நம்முடையதாக இருக்க** வேண்டுமென்று — **நம்மைவிடக்** குறைந்த **இயற்கை வளத்தினை** மட்டுமே பெற்றிருந்தும், **மிகவும்** உயர்ந்த நிலையில் **திகழ்ந்திடும்** நாடுகள் பலவற்றைச் **சுட்டிக்** காட்டி!

இந்த வாதங்களை **மறுத்திட** மார்க்கமில்லாத நமது **மந்திரி**களும் மற்றவர்களும் **எப்படியெப்**படியோ, நம்மைத் **தூற்றுகின்ற**னர்—துளைக்கின்றனர். **சாகச** வலைகளும் வீசப்படுகின்றன **சம**யத்தில் — பாவம், **சிங்கத்தைப்** பிடித்திட சிலந்தி வலை **விரிப்ப**தைப்போல! அண்மையில் **நமது** மாநில நிதி அமைச்சர் **பேசியிருக்**கிறார். "திராவிடம் **பெறப்பட** வேண்டியதுதான். **ஆனால் அவ**சரப்படாதீர்கள்! **ஐந்தாண்டுத்** திட்டங்களெல்லாம் **நிறைவேற்றப்** படட்டும். அதன் பயனும் **நமக்**குக் கிடைக்கட்டும். **அதன் மூலம்** நாடு ஓரளவு முன்னேறும்—**பிறகு** விடுதலைப் **போராட்டத்தைத்** **துவங்கலாம்" என்று சமரசப்** பேச்சு வார்த்தை **நடத்துகிறார்.**

அவருடைய **கருத்திலுள்ள** குறைபாடுகள் இரண்டு. **ஒன்று** ஐந்தாண்டுத் திட்டங்களால் **திரா**விடம் நன்மை பெற முடியும் **என்**கிறார் — திட்டத்திற்கென **நாம்** தருகிற பணம், **திட்டத்தின்** மூலம் நமக்குக் கிடைக்கிற **இலா**பத்தைவிட அதிகம் என்கிறோம் நாம், அவரை மறுத்திட **முடியாத** புள்ளி விவரத்தை **ஆதாரமாகக்** காட்டி. தன் கரத்தையே **நம்பி** திராவிடம் முன்னேற **முடியாது** என்று நினைக்கிறார்—**இது இரண்**டாவது குறைபாடு. **அப்படியே**

முடியாதென்று வைத்துக்கொண்டாலும் அன்னியரை நம்பி, அவரது அடிபணிந்து வாழ்வதா முறை? தாய்ப் பால் இல்லையென்பதற்காக, தான் ஈன்ற குழந்தையை மற்றொருத்திக்குத் தந்து விட எந்தத் தாய் ஒப்புவாள்?

கனடா நாடு நமக்குத் தருகின்ற பாடம் மற்றொன்றுகூட இருக்கிறது. **குவிபெக் — அண்டாரியோ** —என்ற இரண்டு முக்கிய மாநிலங்கள் உண்டு. அதில் முன்னதில் பிரெஞ்சுக்காரர்களே பெரும்பாலோர்—பின்னதில் ஆங்கிலேயர் மிகுதி! ஆங்கிலமும் பிரெஞ்சும் அரசாங்க மொழிகளென ஒப்புகிறது அந்த நாட்டு அரசியலமைப்பு. இருந்தும் என்ன காரணத்தாலோ பிரெஞ்சுக்காரர்களது ஆதிக்கம் மேலும் மேலும் வளர்வதாக ஆங்கிலேயர் கருதினர். அதன் பலனாக அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில், அவர்களிடம் மிக்க செல்வாக்கு பெற்றிருக்கிற **கன்சர்வேடிவ் கட்சி** வென்றது—22 ஆண்டுகளாகப் பதவியிலிருந்து வரும் லிபரல் கட்சி தோற்றது. அந்தக் கட்சியினர், அமெரிக்காவின் கைப்பாவைகளாக இயங்கினர்—அமெரிக்க முதலாளிகளை கனடா நாட்டுத் தொழில்களனைத்தையும் பெற்ற சூத்திரதாரிகளாய் ஆக்கி விட்டனர்—என்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டதும், லிபரல் கட்சியின் தோல்விக்கு மற்றொரு காரணமாகக் கருதப்படுகிறது.

இங்கென்ன நிலை? மொழியளவில் உரிமையில்லை. அரசாங்க அலுவலகங்களில்—சட்ட மன்றத்தில்—கல்லூரியில் - இவை எதிலுமில்லை தமிழ் மொழி! தாலாட்டவும் பாராட்டவும்தானே பயன்படுகிறது! கார்டுகளில் கவர்களில்—காலண்டரில் காசுகளில்—அனைத்திலும் இந்தி ஆட்சி செலுத்துகிறது, கனடாவில் பிரெஞ்சு மொழியின் ஆதிக்கம் வளர்ந்ததைப் போல! அந்த நாட்டு லிபரல் கட்சியினர் எப்படி அமெரிக்காவின் கைப்பாவைகளாக — அந்த நாட்டு ஆலை முதலாளிகளின் கைக்கூலிகளாக—இருந்தனரோ, அதைபபோல் நமது மாநில அரசாங்கம், இயங்கி வருகின்றது இங்கு.

இதே நிலை இன்னும் நீடித்தால் கனடா நாட்டு லிபரல் கட்சிக்கு ஏற்பட்ட நிலைதான், இந்த நாட்டு காங்கிரஸ் அமைப்புக்கும் ஏற்படும்! இது அரசியல் அரிச்சுவடி —அனைவருக்கும் எளிதில் புரிகின்ற ஒன்று. இதைப் புரிந்துகொண்ட காரணத்தால்தானோ, என்னவோ, நமது நிதியமைச்சர் நேசக் கரம் நீட்டுகிறார்—"பத்து ஆண்டுகள் வரையாவது பொறுத்திருங்கள்," என்று!

எனவே கனடாநாட்டு வரலாறு திராவிடத்திற்குத் தந்திடும் பாடங்கள் இரண்டு! ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவனி போற்றிடும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பெற்றிருந்த நாம்—இன்று உலகில் சிறப்புற்று உன்னத நிலை எய்தியுள்ள மொழிகள் பலவும் எழுத்து வடிவம் கூடப் பெற்றிராத நாட்களிலேயே, இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் பெற்ற பைந்தமிழினைப் பெற்றிருக்கும் நாம் — வற்றாத ஆறுகள், வளமிக்க வயல்கள், வானுயர் மலைகள், வள்ளலென வழங்குகின்ற எண்ணிறந்த உலோகக் கனிகள், இத்தனையும் பெற்றிருக்கிற நாம்—இவையனைத்திலும் எந்தவிதத்திலும் நம்மை விட ஏற்றம் பெற்றிராத கனடா அடைந்துள்ள வளர்ச்சியினை நிச்சயம் பெற்றிட முடியும் — நாடாளும் பொறுப்பு நம்மிடம் இருந்தால்—இது நாம் பெறும் முதல் பாடம். தாய் மொழி பெறவேண்டிய இடத்தினைப் பிற மொழிக்குப் பெற்றுத் தந்து — தாயகத்தை மாற்றாருக்கு மண்டியிடச் செய்யும் எந்த இயக்கமும் நீண்டநாள் வாழ்ந்திட முடியாது; இது இரண்டாவது பாடம். இவை இரண்டினையும் இதயத்தே பதித்திடும் துணிவையும் தெளிவினையும், இனியேனும் நமது "அகில இந்தியாக்கள்" பெறுவார்களாக!!

★

4.ம் பக்கத் தொடர்ச்சி

சட்ட மன்ற நுழைவு, புதியதோர் பொறுப்பு எனினும், அத்தனையையும் குன்றவறச் செய்யும் ஊக்கமும் உற்சாகமும் கொஞ்சமும் குறையவில்லை. வேலைகள் அதிகமாக அதிகமாக, உற்சாகமும் வளரவே செய்கிறது! காரணம், நாட்டவர், நம் கொள்கையின்பால் காட்டும் அன்பும்—அதனை வளர்ப்பதில் நம்மவர்கள் காட்டிடும் அக்கரையும்தான். இந்த நிலையிலே **ஆங்கில வார இதழ்** ஒன்றினையும், துவக்கியிருக்கிறோம். தமிழறியாதார் உள்ளமெல்லாம் கொள்ளை புக, ஆந்திரமும் கேரளமும், கன்னடமும், உலகத்தின் பல பகுதிகளும் நம்மையறிய, எதிர்பார்த்ததைவிடப் பெருமிதமாகப் பவனி வருகிறது. ஆங்கில ஏடு.

எனவே, இன்னும் வேலைகள் பெருகுமோ என்ற கட்டத்தில், புதிய ஆண்டில் எடுத்தடி வைக்கிறது "திராவிட நாடு." ஆதரவாளர்களையும் அவர் தமக்கு ஏடுதரும் ஏஜண்டுகளையும் நம்பியேதான், இலட்சிய ஏடுகள் வாழவேண்டும். இவ்வகையில் நமக்கு போதுமான ஒத்துழைப்பை ஏஜண்டுகள் தருகின்றனர்; ஆதரவாளர்களைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை—வண்ணம் குறைந்திருந்தாலும் ஒருபொருட்டாக எண்ணாது எப்போதும் நம்பால் அன்புகாட்டி வருகின்றனர். இந்த ஆண்டில் புதுப் புது எண்ணங்களைத் தர முயலுவோம்! — இலட்சிய முழக்கம் பரவும் வகையில் பணிபுரிவோம் — என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காலம், பறக்கிறது! அதன் ஒவ்வொரு துடிப்பையும், தாயக வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் கட்டத்தில் நாம் உள்ளோம். அதற்கான வகையில், உங்கள் "திராவிட நாடு" தன்னாலானதையெல்லாம் செய்ய காத்து நிற்கிறது. அதற்கு, வழக்கம்போல் உறுதுணையாகயிருந்து, இலட்சியப் பணியில் தன் கடமையினைச் செய்ய உதவி புரிவீர்களாக!—என்று வேண்டிக்கொண்டு, புது ஆண்டுக்குள் நுழைகிறோம். வணக்கம்.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

பலன் கிடைக்காதே!'' என்ற கருத்துப்படப் பேசினர். சட்ட சபை முறைப்படி, அமைச்சர்கள் 'யார் வாயையும் அடக்கும்'வாய்ப்பினையும் பெற்றிருக்கிருர்கள்; பதில் அளிப்போரின் வாயைப் பூட்டிவிடவும் உரிமை இருக்கிறது! எனவே அங்கு நான் பதிலளிக்க இயலவில்லை; சென்னையில் அது போது நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது, நான், நிதி அமைச்சரின் போக்குபற்றிக் குறிப்பிட்ட போது, "அவருடைய போக்கு, எப்படி இருந்ததென்ருல், வெளியே நின்றுகொண்டு, சன்னல் வழியாகப் பார்த்தபடி இருந்த தன் காதலியைத் தோட்டத்துக்கு வா! என்று காதலன் ஜாடை காட்டும்போது, அதே அறையில் வேருேர் பக்கம் இருக்கும் தன் தாய் கண்டுவிட்டால் ஆபத்தாகுமே என்ற அச்சம் கொண்ட காதலி, தாய் பார்த்துவிடப் போகிருள் — சிக்கிக்கொண்டால் இருவருக்கும் ஆபத்து, போ! போ! என்று ஜாடை காட்டுவதுபோல இருந்தது'' என்றேன.

அமைச்சர் பக்தவத்சலனுரால் கோபத்தைத் தாங்கிக்கொளள முடியவில்லை; ஒரு இடத்திலே, அவர், "அரசியல் விஷயத்துக்கான விளக்கத்தைக் கூட காதலி உவமைவைத்துப் பேசுகிருர்கள்!'' என்று பேசினர். கண்டனம்! அகம், புறம், எனற இரு அணிகலன்கள, தமிழில்! நான புறம் விளங்க அகம துணை செய்யட்டும் என்று கருதினேன — அமைச்சருக்குப் பிடிக்கவில்லை. காரணம், யாதோ, நானறியேன்! தமிழ்ப் புலவர்களோ, நெரிஞ்சி முள்ளையும் பிரிவுத் துயரத்தையும் இணைத்து, பா அளித்தனர்! அவர்கள், பாபம், புலவர்கள், நானோ அமைச்சர், என்பார் போலும்! உண்மை! இது என்ன, புலவர் தம் அறிவுரை கேட்டு அரசு நடந்திடும் காலமா!! ஆள் எண்ணி அமுல் நடத்தும் நாள்!!

தம்பி! அந்த எண்ணிக்கை பலத்தை வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் அமைச்சர் அவை இன்று எல்லாக் கண்டனக் கணைகளிலிருந்தும் தப்பிப் பிழைத்து வருகிறதே அன்றி, வேறில்லை,என்பதனைச் சட்டசபை குறித்த நடவடிக்கைகளைக்கூர்ந்து பார்த்தால், விளங்கும.

எண்ணிக்கை பலம் தவிர, வேறு எதைக்காட்டி, எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்றுபட்டு 'தமிழ்நாடு' எனப் பெயரிடுதல் வேண்டும் எனக் கேட்டதைத் தோற்கடித்திருக்கமுடியும் என்று எண்ணிப்பாரேன்!

தமிழார்வமும் புலமையும் பெற்றும், பிறர் பெறச்செய்யும் பணியாற்றுவோரும்அந்தஅவையிலே அமர்ந்துள்ளனர் தம்பி, காணக் களிப்பாகத்தான் இருக்கிறது.

உரிமை, எல்லை, உடைமை, இவைபற்றி உரத்த குரலிற் பேசி, மிக உரத்த குரலிலே பேசுவதன் மூலமே, பிறரும் அதனையே எடுத்துரைக்கின்றனர் என்பது நாட்டினருக்குத் தெரியாதிருக்கச் செய்வதுடன் விறுவிறுப்பாகப் போராடிய வீரர்கூட அங்கு வீற்றிருக்கின்றனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் என்ற தலைப்பின கிழ் ஓர் அமைபபு; அதிலே உள்ளவர் அனைவரும அரசோச்சும் அணி மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். இருந்து? பாரதம் படித்தும் படித்திடக் கேட்டும் சுவைப்பவர்களல்லவா? துகில் உரியப்பட்டது; தலையைத்தொங்க விட்டுக்கொண்டு இருந்தனர்.

எண்ணிக்கை பலம் தவிர, இந்த இழிநிலைக்கு வேறு என்ன அரண் இருந்திட முடியும்!

இவர்தம்மில், முன்பு நான் எடுத்துக் காட்டியபடி, விடுதலை இயக்கத்தில் தீவிரமாகஈடுபட்டுத் தியாகத் தழும்பேற்றவர்கள் உளர்--ஆனுல் அவர்தம் தொகையும் சிறிது, அவர் தமக்கு அரசோச்சும் அலுவலில் அளிக்கப் பட்டுள்ள வாய்ப்பும் மிகக் குறைவு!

வேடிக்கை என்னவென்ருல், அத்தகைய வீரச் செயல் புரிந்தவர்களிலே, பலர், நாட்டின் ஆட்சி தமது கட்சியிடம் ஒப்படைக்கப் பட்ட பிறகு, எதிர்பார்த்தவை கிடைக்கப்பெருமல், நலிவு மலிந்து நாசக் குறிகளும், சுயநலச் சூருவளியும் மிகுந்திருப்பது கண்டு, மனம் உடையும் நிலையில் உள்ளனர்; அத்துடன், ஒரு குறிப்பிட்ட இலட்சியத்துக்காகப் பாடுபட, கஷ்ட நஷ்டம ஏற்க துணிவுபெற்ற நாம் இருபபதையும, நாடு, மெல்ல மெல்ல, ஆனுல் யார்தான, எவ்வளவுதான் எத்துணை முறைகளைக் கையாண்டுதான தடுத்தாலும், நமது குரலைக் கேட்கவும், புரிந்துகொள்ளவும், ஆதரவு தரவும் முற்பட்டிருப்பதையும், உணர்ந்து மதிப்பளிக்கின்றனர்; அதிக ஆத்திரமும், அருவருப்பும் அச்சம் தரும் துடி துடிப்பும்— ஆளும் கட்சியில் இருக்கிரேம் என்ற ஆணவம் பெற்றெடுக்கும் முடுக்குடனும் மிடுக்குடனும் பேசுவோர் யார் அறிவாயோ? விடுதலைப் போராட்டகாலத்திலே ஒதுங்கினின்றவர்கள், வெறுத்துப் பேசியோர், எதிர்த்து வந்தோர், இவர்களே!

இந்த "வினைந்த காட்டுக் குருவிகள்'' வீரக்குரலெழுபபுவது கேட்க, வேடிக்கை வேடிக்கையாகத்தான் இருக்கிறது!! செஞ்சிக் கோட்டையில் ஏறுபவர்களெல்லாம், தேசிங்கு ராஜா அல்லவே!—என்று நான சட்டசபையில் கேட்டபோது, தம்பி! நமது தோழர்கள் அடைந்த மகிழ்ச்சியைவிட, காங்கிரஸ் நடாத்திய கடும் போராட்டத்திலே ஈடுபட்டு, செஞ்சிறை கண்டு, வெள் தழும்பேறும அடக்குமுறையில் நீந்தி வெளிவந்தவர்களே அதிக மகிழ்ச்சி அடைந்தனர்.

நீ அறிவாய்—நான கூறி நாட்டினரும் அறிவர்-நான எபபோதும், விடுதலைக்கு உழைத்த வீரர்களின் தியாகத் தழும்புகளைக் கண்டு உரிய மதிப்பு அளிபபவன், என்பதை. அவர்கள ஒரே ஒரு குற்றம் — தம்மையும அறியாது புரிகின்றனர். என்னவென்ருல், விடுதலைபபோரின் எல்லாக் கட்டங்களும் முடிந்துவிட்டன என்றும்—தியாக உள்ளமென்பது தம்முடனன்றிப பிற எவரிடமும்இருந்திடாது என்றும் எண்ணுகின்றனர். பெருந்தவறு! நீண்ட நாள் பிடிக்காது அவர்கள் இந்தத் தமது தவறை உணர்ந்திட. அதுவரையில், அவர்கள் அருவருப்புடனும், கோபத்துடனுமதான் பேசுவர். அவர்கள் பட்ட கஷ்டம் பாழாகிறது என்பது கோபத்துக்கு முதற் காரணம், அதைப் பார்த்து நாம் பரிகாசம் செய்கிருேம என்பது மற்ருேர் காரணம். நான் அவர்களின கோபத்தைக் கூட மதிக்கிறேன்! ஆனுல் 'கூடிக்கொண்டதாலேயே' மதிப்புதேடிக்கொண்டு வந்து தீரும் என்ற நினைப்பு நெளியும உள்ளத்துடனும், கூடினேன கிடைத்தது, இதுமட்டுமதானு என்று கணக்குபபார்க்கும காரியவாதத் தன்மையுடனும இருப்பவர்கள், கண்

களை உருட்டும்போதுதான், உள்ளபடி, சிரிப்பு வருகிறது!!

மயில், தோகையை இழந்து நிற்க, வான்கோழி ஆட்டம் ஆடுவது போலிருக்கிறதல்லவா!!

சட்டசபையில், நமது தோழர்கள் காட்டிடும் ஆர்வமும் பெற்றுவரும் ஆற்றலும், கொண்டுள்ள பொறுப்புணர்ச்சியும், அனைவராலும் பாராட்டப்படுகிறது — இந்திய துணைக்கண்டத்திலுள்ள எல்லா இதழ்களுமே, மக்களாட்சியின் மாண்பு வளரத்தக்க விதத்தில் ஒரு புதிய சக்தி உருவாகி வருகிறது என்பது குறித்து மகிழ்ந்தும், வியந்தும் எழுதுகின்றன. அதிலும், அமைச்சர் சுப்ரமணியம் அவர்கள், அனுபவம் குறித்து அவையில் புதிதாக வந்தோர்களுக்கு, ஆசிரியர்போல் பாடம் நடாத்திவிட்டு, "பத்தாண்டுக் காலம் பிரிவினைக் கிளர்ச்சியை ஒத்திப் போடுங்கள்" என்று கேட்டுக்கொண்டாரல்லவா — தம்பி, தம்பி, படாதபாடு படுகிறார் — காங்கிரஸ் ஏடுகள் பலவும் அவர்மீது சீறிப் பாய்கின்றன — அவரும் "பாயைச் சுருட்டிக்கொண்டேன" என்று கூறிப் பார்க்கிறார்.

அமிர்த பஜார் பத்திரிகை

பிரிபிரஸ்

இந்துஸ்தான் டைம்ஸ்

போன்ற இதழ்கள் பலவும் யார் இந்த அவசரக்கார ஆசாமி? எப்படி இவர் அமைச்சராக இருந்திட அனுமதிக்கப்படுகிறார்? என்றெல்லாம், கருத்துப்பட காரசாரமாகவும், கடுமையாகவும் தாக்குகின்றன!

எனக்கு உள்ளபடி வருத்தம் — அமைச்சர் தமது உள்ளத்திலே உறங்கிக்கிடக்கும் பல எண்ணங்களைத் தட்டி எழுப்பி நடமாட விடுவதை, இந்த இதழ்கள் தடுத்துவிட்டனவே என்று; அவருக்குக் கோபம், ஒரு வார்த்தை, தெரிந்தோ தெரியாமலோ, தவறியோ சரியாகவோ கூறிவிட்டால் தான் என்ன? குடியா முழுகிப் போய்விடும்? ராஜ்குமாரி அமிர்த கவுரி, அமைச்சராக இருந்து, அவனி எங்கும் பவனி வந்து, இப்போது கிரீடத்தைக் கீழே இறக்கிவைத்த உடனே மதுவிலக்காவது மண்ணாவது! அது புதைகுழி சென்று எத்தனையோ நாளாகிவிட்டது! என்றும், வரிமேல் வரிபோட்டு ஏழைகளை வாட்டி வதைக்கும் ஆட்சியை வாழ்த்தவா முடியும், வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் பேசினார்கள் — இந்த இதழ்கள் எவ்வளவு இங்கிதமாக இருந்துவிட்டன — என்மீது எவ்வளவு வெறியுடன் பாய்கின்றன, காரணம் என்ன? நான் தெறகு!! என்பதனால்தானே — பார்க்கப்போனால், கழகத்தார் சொல்வது உண்மையாகத்தானே இருக்கிறது — என்று எண்ணிக் கோபமடைகிறார்!!

நாட்டு மக்களின் கவனம், நல்ல முறையில் ஈர்க்கப்படுகிறது — நமது தோழர்களின் சட்டசபை நடவடிக்கைகளின் மூலம். நாளிதழ்களில் வெளிவருவன குறைவுதான — அவரவர் பேச்சுப், அவைகளை ஒட்டி எழும் நிகழ்ச்சிகளும், துணைத்தனத்தாரின் ஏடு தாங்கி வரும் — அதுபோது உன் பார்வைக்கு வைக்கப்படும் — தீர்ப்பு அளிப்பாய்!

ஆங்கில இதழின் உணர்ச்சியிலேயே என்னை நான் பின்னிக்கொண்டு, உன்னுடன் உரையாடும் மகிழ்ச்சியை இழந்துவிடுவேனோ என்று ஐயப்படாதே, தம்பி! அது முந்திரிப் பருப்பானால், இது வெண்பொங்கல்! அது கருவி, இது என் உள்ளம்! அது பிறர் நெஞ்சைத் தொட, இது உன்னுடன் உறவாட! அது நம்மைப் பிறருக்கு விளக்க, இது நம்மை உருவாக்க!! எனவே, இதனை இழந்துவிட ஒருபோதும் சம்மதியேன.

'திராவிட நாடு' மூலமாகவும், இந்த மடல் வழியாகவும், உனக்கு நாளை, என்னென்ன வெல்லாமோ கூற நினைக்கிறேன — பல எண்ணங்கள் ஓவிய வடிவாகாமல், கோடளவு உள்ளன, சில ஓவிய வடிவம் கொண்டுள்ளன, ஆனால் வண்ணம் கூட்டப்பட வேண்டும்.

இந்த இதழ், தம்பி, பதினாறும் ஆண்டு!!

தித்திப்பான செய்தி — அலைந்து திரிந்துவரும் இவன் ஒரு இதழ் நடத்தவல்லானா என்று ஏளனக் குரல் எழுப்பியோர் எத்தனை — இவன் எம். ஏ. படித்தால் போதுமா, தமிழ் இலக்கண இலக்கியம் அறிவானோ? என்று எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியோர் எவ்வளவு? ஈராறு திங்கள் நடமாடி, பிறகு ஈளைகட்டி இருமி, இருக்குமிடம் தெரியாது போகும் என்று சாபமளித்தோரும் உண்டே! எதுகை மோனை போதுமா, எண்ணத்திலே ஓர் புதுமை, எழுதுவதிலே ஓர் தெளிவு இருத்தல் வேண்டாமோ — அஃது இவன பெறுதல் ஆகுமோ, என்று தலை அசைத்துப் பேசினோரின் தொகைமட்டும், சிறிதா?

எல்லா இன்னலும் தாங்கி, தம்பி, உன் அன்பெனும் அணிகலனைப் பெற்று, 'திராவிட நாடு' பதினாறும் ஆண்டு பெறுகிறது.

இனி, உன்னுடன உரையாடுவதன வாயிலாகவே, உலக நடவடிக்கைகளையும், நமது உள்ளத்தை ஆட்கொண்டுவிட்ட இலட்சிய வெற்றிக்கான பிரச்சினைகளையும், எடுத்துரைக்க இருக்கிறேன. அமைச்சர் கோபப்படுகிறார் என்பதற்காக 'அகத்துறை'யை நிறுத்திக்கொள்ள இயலுமா? அந்திக் கலம்பகம் புதுமுறைதொடராக அளிக்க எண்ணியிருக்கிறேன் — கோடுகள் தயாராகிவிட்டன — வடிவம், விரைவில், வண்ணமும் கூட்டிட இயலும்.

உடனடியாக உனக்கோர் புது விருந்து; இராதாமணாளன் தீட்டிய சுவைமிகு தொடர்கதை, பாண்டியன் திருமேனி — வெளிவர இருக்கிறது.

தம்பி! நீண்டநாட்களாகிவிட்டனவே, என்பதற்காக, அண்ணன், செல்லமாக இது கிடைக்கும், அது கிடைக்கும் என்று ஆசை வார்த்தை பேசுகிறான் என்று எண்ணிவிடாதே! உண்மையிலேயே, 'வட்டியும் முதலுமாக' திருப்பி வாங்கிக்கொள்வது என்பார்களே, அதுபோலச் சிலகாலம் உன்னுடன் உரையாடாதிருந்த குற்றத்துக்குக் கழுவாய் தேடிக்கொள்ளும் முறையில் புதியன, இனியன, பல; இனி.

அண்ணன்,

அண்ணாதுரை